# சுவடுகள்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE




1981 யாழ். நூலக எரிப்பு,
மாவட்ட சபைத் தேர்தல்

1982 பாண்டி பஜாரில் உமாமகேஸ்வரன், பிரபாகரன்
மோதல்

1983 இனக்கலவரம், 53 போராளிகள் வெலிக்கடைச்
சிறையில் படுகொலை

1984 வட்ட மேசை மகாநாடு, TELO, EPRLF,
EROS ஒன்றாக இணைந்தன.

1985 இயக்கங்களின் கூட்டில் LTTE இணைவும் வெளியேற்றமும்
திம்புப் பேச்சுவார்த்தை, அநுராதபுரத்தில் 150
சிங்களப் பொதுமக்கள் படுகொலை

1986 'சகோதரத்துவ யுத்தம்', மலையகத்தில் இனக் கலவரம்

1987 தமிழ் மக்கள் மீது ஒப்பந்தத் திணிப்பு, இந்தியா
விடுதலைப் புலிகள் மோதல்

1988 மாகாணசபைத் தேர்தல், முதல்முறையாக
மாகாணசபை பதவியேற்கிறது.

1989 புலிகள் இலங்கை அரசு பேச்சு, இந்தியப் படைகள்
விலகல் ஆரம்பம்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




| | Aerofloat | Air Lanka | Air India |
|---|---|---|---|
| Colombo | 5 600,- | 6 550,- | |
| Singapore | 5 600,- | | 7 350,- |
| Madras | | | 6 400,- |

GT
GOLDEN TRAVELS AS

Tel.: 02/360290
Tel.: 02/362959
Tlx.: 79618 Gold N.

| | |
|---|---|
| Monday - Friday | 9.00 - 17.00 |
| Saturday | 10.00 - 13.00 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொங்கலும் போரும்.



தைபிறந்ததும் பட்டாசு வெடித்து, பொங்கல் பொங்குவோம். கேட்டால் சூரியனுக்கு நன்றி சொல்லுவதற்கென்று பட்டெனச் சொல்லிவிடுவோம். அதற்குமேல் சென்று அதன் பின்னணி என்ன என்பதை நாம் தேடிக் கண்டுகொள்வது குறைவு.

ஆதிகாலத்தில் நம் முன்னோர்கள் கூட்டமாக வாழ்ந்து, கிடைத்ததை உண்டனர். இது என்னுடையது; அது உன்னுடையது என்ற பேதம் இருக்கவில்லை. குகைகளில் வாழ்ந்தனர்; கற்களால் ஆயுதம் செய்தனர். இயற்கையிலிருந்து அறிவைப் பெற்றனர். அனுபவமும் ஆற்றலும் வளர்ந்தது; மிருகங்களைப் பழக்கி வளர்க்கலாயினர். அவற்றுக்குப் புல்வெளிகளைத் தேடியவர்கள் நாளடைவில் நாடோடிகளாக மாறிப்போயினர். இதன் நிமித்தம் கூட்டமாக வாழ்ந்தவர்கள். பிரிந்துசெல்ல வேண்டியதாயிற்று. வேட்டையாடி வாழ்ந்தவர்கள் நாளடைவில் காய்கனிகளை உண்டாக்க முடியும் எனக் கண்டுகொண்டனர். அவர்களது வாழ்வில் விவசாயம் புகுந்துகொண்டது. தாம் பயிரிடும் நிலங்களுக்கு அருகிலேயே தங்கவேண்டியதால் சிறுகுடிலமைக்கப் பழகிக்கொண்டனர். படிப்படியாகப் பயிரிடுவதற்குத் தேவையான கருவிகள் செய்யக் கண்டுகொண்டனர். பயிரிடும் பலன் கண்டவர்க்கு அதுவே பழக்கமாயிற்று.

படிப்படியாக சமூகமாக வளர்ச்சியடையத் தொடங்கிய மனிதனின் வாழ்வில் பல விடயங்கள் இணையத்தொடங்கின. இயற்கையை வழிபடுதலும் வாழ்வில் இணைந்தது. பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்து, பண்டமாற்று முறை உருவாயிற்று. நிலத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். கால்நடைகள்

www.tamilarangam.net

தமிழ் மக்கள் மத்தியில் மத்தியதர வர்க்கம் பெற்றிருந்த ஆளுமை தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அதன் நலன்களுக்கே பலியிட வைத்தது. போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கவேண்டிய பாட்டாளி வர்க்கத்தினர் விலங்கு பூட்டப்பட்டுப் பின் தள்ளப்பட்டனர். சமூக விடுதலை என்பது தேசிய விடுதலைக்குத் தொடர்பற்ற ஒன்ருக ஆக்கப்பட்டு, எமது விடுதலை வெறும் எல்லைப்பிரிப்பு என்றே அர்த்தப்படுத்தப்பட்டது.

போராட்டத்தில் மக்கள் பங்களிக்க வேண்டிய தேவை மறக்கடிக்கப்பட்டது மாத்திரமன்றி, மக்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதிலும், அடிப்படை மனித உரிமைகளை மறுப்பதிலும் தொடர்ச்சியாக 'விடுதலை அமைப்புகள்' செயற்பட்டு வந்தன. குறுகிய குழுவாதத்தாலும், தனிநபர் நலன்களை முதன்மைப் படுத்தியமையாலும் உண்மையாகவே தேசத்துக்காகத் தமது உயிரை அர்ப்பணிக்க முன்வந்த ஏராளம் இளைஞர்கள் ஒருவரை ஒருவர் சுட்டுத்தீர்த்தனர்.

தெற்கிலோ, திடீர் புரட்சி தோல்வியுற்று அரசியலில் இருந்து பின்தள்ளப்பட்ட ஜே.வி.பியினர் 83 இனக்கலவரத்துடன் தலைமறைவாக நிர்ப்பந்திக்கப்பட்டு, இந்தியப் படை வருகையுடன் புத்துயிர் பெற்றுத் தமது தெளிவற்ற அரசியல் நடவடிக்கைகளால் ஆயிரக் கணக்கில் மக்கள் பலியாகக் காரணமாயிருந்தனர். இந்தத் தசாப்தத்தின் முடிவு ஜே.வி.பி தலைவர்கள் பலரைப் பலியெடுத்தபோதும், மக்களின் நலன்களின் அடிப்படையில் எழாத அவர்களது போராட்டம் தீவிரமடைந்தபடியே உள்ளது.

இந்தப் பத்தாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பெரும்பாலும் கசப்பான அனுபவங்களே. அவற்றை அனுபவங்களாகக் கொண்டு இனிவரும் காலங்களைச் சரியாகப் பயன்படுத்தி முன்னேறுவது தேசபக்த சக்திகளின் கடமையாகும்.

மக்களே வரலாற்றை உருவாக்குபவர்கள் என்பது எமது மண்ணில் புதிய தசாப்தத்தில் நிரூபிக்கப்படும்.

எமது சமூகத்தில் கணிசமான அளவு இளைய தலைமுறை இந்தப் பத்து வருட காலத்தில் உலகெங்கும் சிதறிவாழ்கிறது. தமது தாய்நாட்டிலேயே மனேரீதியாக வாழும் இந்தத் தலைமுறையின் எதிர்காலம் பற்றியும் ஒரு கேள்வி உருவாகிவருகிறது. தவிரவும் இவர்கள் தமது நாட்டுக்கு வழங்கவிருக்கும் பங்களிப்புப் பற்றியும் சரியான விவாதங்கள் இன்றைய சூழலில் அவசியமாகிறது.

சுவடுகள், மார்கழி 1989, தை 1990

சுவடுகள்

www.tamilarangam.net

## ராஜினி



21.01.89அன்று யாழ் மருத்துவ பீட உடற்கூற்றியற் பிரிவின் தலைவி (head of the anatomy dept.) டொக்டர் ராஜினி அவர்கள் கொல்லப்பட்டது பற்றிச் சுவடுகள் செய்தி வெளியிட்டமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆயிரக் கணக்கான அர்த்தமற்ற கொலைகளைக் கண்டு பழகிப்போனதுடன், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதன் நிமித்தம் எவ்வித எதிர்த் தாக்கத்தையும் காட்டிக் கொள்ளாத எமது தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை இக்கொலையில் என்ன விசேடத்துவம் இருக்கிறது என்று ஒருவர் வினவலாம். ராஜினிக்கு வாழ்வில் கிடைத்த வாய்ப்புகளையும், அவர் வாழவெனத் தெரிந்தெடுத்த வழிமுறைகளையும் சற்று நோக்கினேமெனில் இக்கேள்விக்கு விடை கிடைக்கலாம்.

<u>யாழ் மருத்துவபீடத்துக்கான பங்களிப்பு</u>

1983 கலவரங்களின் பின்பு உயர்கல்வி பயின்றோர் நாட்டைவிட்டு வெளியேறியதால் பாதிப்புற்ற துறைகளில் முக்கியமானது வைத்தியத் துறையாகும். ஐந்து மருத்துவ பீடங்களை மொத்தமாகக் கொண்டுள்ள இலங்கை பல்கலைக் கழகங்களில் தேர்ச்சிபெற்ற உடற்கூற்றியலாளர் நால்வரே (இப்போது மூன்று) இருந்தனர். ஒழுங்கான உடற்கூற்றியல் வகுப்பை நடத்த ஒவ்வொரு மருத்துவ பீடத்துக்கும் ஒரு குறித்தளவு உடற் கூற்றியலாளர் தேவை. ஏனெனில் இப்பாடமே முழு வைத்தியக் கல்விக்கும் ஆதாரமானதாகும்.

யாழ் மருத்துவபீட உடற் கூற்றியல் பிரிவை ராஜினியே ஒருகையால் தலைமை தாங்கி வழிநடாத்தினர். அதன் கல்வித்தரத்தைக் காப்பாற்ற அவர் பல தியாகங்களைச் செய்யவேண்டியிருந்தது. இவரது இழப்பு யாழ்ப்பாணத்தில் உருவாகும் வைத்தியர்களில் ஒரு தரப்பின்னிடைவை ஏற்படுத்துமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

<u>வெளிநாட்டிலிருந்து திரும்புதல்</u>

1987இன் ஆரம்பத்தில் பிரிட்டனில் வைத்தியப் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாட்டுக்குச் சேவை செய்யவெனத் திரும்பினர் ராஜினி. அரசபடைகள், தீவிரவாத இயக்கங்கள்




ஆகியவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக முன்வைத்த கருத்துகள் தனது உயிருக்கு அச்சுறுத்தலாக அமைவதை அவர் ஏலவே அறிந்திருந்தார். இம்முறை (1989)இல் அவர் மூன்று மாத ஆராய்ச்சிக்கென பிரிட்டன் சென்றிருந்தபோது அவரை அங்கேயே தொடர்ந்து இருக்குமாறு நண்பர்கள் வலியுறுத்தியது அவருக்கு எழுதப்பட்ட கடிதங்கள் மூலம் தெரியவந்துள்ளது. எனினும் புரட்டாதி மாதம் மூன்றும் திகதி அவர் நாடு திரும்பவென எடுத்த முடிவுக்கு பல காரணங்கள் இருந்தன:

1) மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு நடாத்தப்பட

www.tamilarangam.net

வேண்டியிருந்த வாய்மொழி மூலமான பரீட்சை.

2) பெண்கள் புனர்வாழ்வு இல்லமான "பூரணி இல்லத்"தில் (இது ஆரம்பிப்பதற்கு ராஜினி உதவியிருந்தார்) தலைநீட்டிய பிரச்சனைகள்.

அவர் பிரித்தானியாவிலிருந்து நாடு திரும்பியபின் உபவேந்தருக்கு எழுதிய கடிதத்தில் தனது ஆய்வுநெறியின் வெற்றி பற்றிக் குறிப்பிட்டபின், "எனது மக்களைப் பிரிந்து எனக்கென்று ஒரு வாழ்வு இல்லை. அதனுல் நான் மீண்டும் வந்துவிட்டேன்" என்று எழுதியிருந்தார். இக்கடிதம் உபவேந்தரால் ராஜினியின் ஞாபகார்த்தக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்(யாழ்) (UTHR/J)

ராஜினி முக்கிய அங்கத்தவராய் இருந்து இயங்கிய இச்சங்கம் கடந்த ஒரு வருட காலமாக, 'இயக்கங்கள் மனித விழுமியங்களை மதிப்பிறக்கம் செய்வது' தொடர்பான அறிக்கை வெளியிட்டிருந்தது. இச்சங்கம் இயக்கங்கள், IPKF, அரசாங்கம் ஆகிய எதன் பக்கமும் சாராமல் நடுநிலையாக இருந்தது.

"நாம் வெளியாரைப் போல் சமூகத்துக்கு வெளியே நின்றுகொண்டு அதைக் கண்டிக்க முடியாது; ஆனுல் நாமும் பிரச்சனைகளின் ஒரு பகுதி என்பதையும், அத்துடன் எம் நடத்தையும் உளப்பாங்கும் கெட்டவையுருவாகக் காரணமாகின்றன என்பதையும்- நாம் ஆய்வுக்கு எடுக்க வேண்டும்" என்ற வெளிப்படை உண்மையை ராஜினி நன்கு அறிந்திருந்தார். இக் கெட்டவைகளின் உருவாக்கத்தில் சமுதாயத்தில் முதற் பலியாகிப் போவோர் ஆயுதம் தாங்கியோரே! அவரின் கோபத்தில் கருணை கலந்திருந்தது.

சீர்திருத்தத்துக்கான தேவையை அனைவரும் உணர்ந்திருந்தமையே UTHRஇல் சகல பல்கலைக்கழக ஊழியர்களையும் (விரிவுரையாளர் முதல் நிர்வாக அலுவலர்வரை) அங்கத்தவராகத் தூண்டியது. மேலும் மாணவர்களைக் கைது செய்தல் மற்றும் இன்னேரன்ன விடயங்களில் இயலுமான நடவடிக்கை எடுக்கவும் இத்தகைய பல்கலைக்கழக ஊழியர் அங்கத்துவம் பெற்ற சங்கம் கணிசமான பங்கு வகிக்க முடிந்தது.

## "The broken palmyrah (சிதைந்த பனைமரம்)"

ராஜினியும் இன்னும் மூன்று கல்விமான்களும் சேர்ந்து எழுதிய இந்த நூல் (1988) தமிழரின் துரதிர்ஸ்ட நிலையை பக்கச் சார்பின்றிப் பரிசீலிக்க எத்தனிக்கின்றது. இது அரச படைகளதும் இயக்கங்களதும் கொள்கை விளக்கம்பற்றியும் வெளிப்படையாகவும் துணிவாகவும் பேசுகிறது.

எமது சமூகத்தினூடு பரிணமம் பெறும் பாசிசப் போக்குப் பற்றிய கலந்துரையாடல்கள் எம்மை சுய தூய்மைப்படுத்த உதவும் என்பது பற்றி ராஜினிக்கு நம்பிக்கையிருந்தது. யாழ்ப்பாணக் கல்விமான்கள் இதுபற்றிக் கலந்துரையாட அஞ்சும் நிலையை

தேவகி தவக்குமார்

இந்நூலில் அவர் கண்டித்திருந்தார். ஆரோக்கியமான சமூகப் பரிணம வளர்ச்சிக்கு இத்தகைய விமர்சனங்கள் அவசியமென அவர் எண்ணினுர். கொலையாளர்களுக்கு அவரின் இத்தகைய போக்கு பிடித்திருக்கவில்லைப் போலும். அவர்கள் விரும்புவது ஒரு உயிர்ப்பற்ற, எதுபற்றியும் கவனம் செலுத்தாத, அயலானைக் கண்டு அஞ்சுகின்ற மனிதர்களைக் கொண்ட- குறிப்பாகக் கல்வி, கலாசார, புத்திஜீவிதமற்று பாலையாகிப் போன ஒரு சமூகத்தையே.

www.tamilarangam.net

பெண்களும் ராஜினியும்

நாட்டுப் பிரச்சனைகளின் விளைவாக வாழும் வகையற்றுப்போன பெண்களுக்கு- குறிப்பாக பாலியற் பலாத்காரத்துக்கு உட்பட்ட அல்லது குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்க்கு- உதவுவதில் அவர் கூடிய கவனம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவர் கூடிய அக்கறை காட்டினூர்.

'சிதைந்த பனைமரத்'திலிருந்து பெண்கள் தொடர்பான சில பகுதிகள்:

* தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் பற்றிய நிலைப்பாடு, கொள்கை, நடைமுறை தொடர்பாக பெண்களை ஆயுதப் போராட்டத்தில் இணையுமாறு கோரும் இயக்கங்களின் ஆரம்ப கொள்கை விளக்கப் பிரசுரங்கள் தவிர வேறு எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. பெண்கள் நிலைப்பாடுபற்றி இயக்கங்களுக்கு உள்ளேயே மிகுந்த குழப்பமான கருத்துகள் காணப்பட்டதென்பதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆனூலும் தமது தலைவரின் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கும் ஆற்றலின்மீது கொண்ட நம்பிக்கையையே தமது விவாதத்தின் இறுதி முடிவாக அவர்கள் வைத்தனர். இதைக் கேட்டு துக்கமடைநத ஒரு பெண் கூறினூர், "ஒரு பெண்ணின் பங்கு வெறுமனே ஆயுதத்தைத் தாங்கும் இயந்திரத்தின் பங்கைவிட கூட என்பதை தயவு செய்து ஞாபகத்தில் கொள்"

* ஏன் போர்க் காலங்களிற்கூட எம் சமூகத்தில் பெண் மிகவும் துணிவாக இயங்கியுள்ளாள். இந்திய இராணுவத்தின் அநியாயங்களை எல்லாம் தனியாகவோ சிறு குழுக்களாயோ சேர்ந்து வெளிக்கொணர்ந்ததில் அவர்களின் பங்கு அளப்பரியது.

மறுதலையாக பெரும்பாலும் பெண்களே போர் நடுவில் தமது குடும்பங்களுக்காகவும் தேசத்துக்காகவும் தீவிரவாதிகளுடன் வாதிட்டும் மன்ருடியும் வந்தவர்கள். மட்டக்களப்பில் ஒரு பெண்ணே மற்றவர்களுக்காக உண்ணுவிரதம் இருந்தாள். இதனுல் எமது அரசியல் வரலாறு பற்றிப் பேசும்போது பெண்களின் பங்களிப்பு வெற்றி பெறுகிறது. அங்கு அதிகாரமின்மை, ஏமாற்றம், எதிர்பார்ப்பு, பொய்த்தனம் போன்றன இருந்தாலும் நம்பிக்கையும் அங்கிருந்தது. நாங்களும் பங்களித்தோம்... ஒரு சிறிதளவு...

மனித உரிமைகளின் தேவதை

ஆண்களே வாய்திறந்து மனித உரிமை, பேச்சுச் சுதந்திரம் பற்றிப் பேச அஞ்சும் ஒரு தருணத்தில் ராஜினியின் துணிவு

## ஆயிரத்தில் ஒன்ருகி.....

அன்றென் மனதில் ஆழப் பதிந்தவை
ஆயிரம் நினைவுகள்..
உனதிளம் கன்னம்,
எழிலுறும் கண்கள்

இன்றென் கண்களில் பனித்திரையாக
நீர்த்திரை படர்வதேன்?
அன்று வேண்டாமென்ருயே...

மனது வலித்தது நினைவிருக்கிறதா?
அல்லது,
உடைந்து போய்விட்ட
ஆயிரங்களில்-
நானும் ஒன்று?

●

காயத்ரி,
கன்பரா,
அவுஸ்திரேலியா

www.tamilarangam.net

பெண்களுக்குப் பெருமை சேர்ப்பதும் முன்மாதிரியானதுமாகும். இரு சிறுமிகளைப் பெற்ற தாயாகவும், எண்ணற்ற மாணவர்களுக்கு அன்புத் தாயாயும் இருந்த அவர், தற்செயலாக கலவரத்தில் மக்களோடு மக்களாக இறக்கவில்லை. திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டார். பிரிட்டனிலிருந்து வந்து இரண்டாம் ஆண்டு மருத்துவபீட வாய்மொழிப் பரீட்சையை இறுதி மாணவருக்கு நடத்தும்வரை காத்திருந்து அது முடிந்து பிள்ளைகளைக்காண வீடு திரும்புகையில் சைக்கிளில் வந்து சுட்டு, அவர் விழுந்தபின் சைக்கிளை நிறுத்தி மேலும் சில ரவைகளைப் பாய்ச்சுமளவுக்கு கொலையாளியால் இது திட்டமிடப்பட்டுள்ளது. கொலையாளிகள் கொலையை உரிமை கோராததிலிருந்து அதன் நியாயமின்மை வெளிப்படுகிறது. ஆரம்பத்தில் பயந்துவெளிவராதிருந்த மக்கள் பின் ராஜினியின் அஞ்சலிக் கூட்டங்களுக்குப் பெருந்திரளாக வருகை தந்தமை மக்களுக்கு மனித உரிமைகளை ஒரேயடியாக மறுக்கமுடியாது என்பதையே காட்டுகின்றது.

## ராஜினிக்கு ஒரு மலர்க்கொத்

மேனுட்டு வாழ்வின்
வளத்தை மறுத்தாய்

மரணத்தின் வெம்மூச்சினூடும்
உனது தலையை நிமிர்த்தி
இங்கு வாழவெனத்
தாய்நாடு மீண்டாய்.

உன்னை அவர்கள்
நாயைச் சுடுவது போல்
நடுவீதியில் சுட்டனர்.
ஆனாலும் உன் மரணம்
அவர்களின் சிறுமையாயும்
உனது பெருமையாயும்
நினைவு கூரப்படும்.

நான் உனக்கு
மலர்வளையம் கொண்டுவரவில்லை.
மாருக,
மணப்பெண்ணென
மலர்க்கொத்துக் கொண்டுவந்தேன்.

தமிழ்ப் பிரச்சினையில் நாட்டின் தென்பகுதியிலும், வெளிநாட்டிலும் வாழும் பலர் பல ஆண்டுகளாக தூய அக்கறை காட்டிவருகின்றனர். இப்பிரச்சினை 1983ல் தோற்றமளித்த இனப் பிரச்சனையிலிருந்து மிகவும் மாற்றமடைந்து வருவது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் இப்போது- ஒரு குறுங் காலத்துக்காவது - வெளிப் பரிமாணங்கள் உட்பரிமாணங்களை மறைத்துக் கொண்டிருக்கிறது. நாம் எல்லோருக்கும் - குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழருக்கு விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் - எம்மை எதிர்கொள்ளும் இப் புதிய யதார்த்தம் பற்றி அனைவரும் விழிப்பாயிருங்கள். எம்மை இப்போது முகங்கொள்வது யாதெனில் அடிப்படை மனிதாபிமானத்துக்கும், நாகரிகமடைந்த விழுமியங்களுக்குமான போர். ராஜினியினதும் அவர் போன்ருேரினதும் மரணங்கள் விழலுக்கிறைத்த நீரா என்பதை இதன் முடிவே தீர்மானிக்கும்.

மனித உரிமைகளுக்கான (யாழ்) பல்கலைக் கழக ஆசிரியர் சங்க அறிக்கையிலிருந்து
(ஐப்பசி நடுப்பகுதி 1989)

www.tamilarangam.net

# கீறிப் பிளக்கப்படுகிற உணர்வுகள்



- கொய்யன் -

கீறிப் பிளந்த
மீன்களின் வயிற்றிலிருந்து

உருவிய குடல்களை
ஒரு பக்கத்தே ஒதுக்கியபடி நான்...

இன்னும் சில நிமிடங்கள்தான்
நாரிக் கடுப்பை சற்று ஆற்றுவதற்கு
மதிய உணவு இடைவேளைமணி
ஒலித்துவிடும்...
குவியும் மீன்குடல்கள்...

நீ ஏன் அதிகம் பேசுவதில்லை?

எதைப் பேசுவது?

வேலைப்பழு தெரியாமலிருக்க
ஏதாவது பேசு!

சுறுசுறுப்பாக மீன்களைக் கீறிப் பிளக்கும்
பெண்மணி 'சிக்றி'.

உங்கள் தேசத்தின்
விசேட பறவை எது?

என்ன நினைத்தாளோ 'சிக்றி'
சிரித்தபடி...
அப்படி எதுவும் என்க்குத் தெரியாது.

விசேட மரங்கள்...?

நீ விசேடமென்று
எதனைக் கருதுகிறுய்?
அதே புன்னகையுடன் சிக்றி.

'நத்தார்' தினத்துக்கு
'கிருன்'மரம் எப்படி விசேடமோ
அப்படி
இலையுதிர் காலம்,
இளவேனிற் காலம்,
வசந்த காலங்களில்...?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டுக்கும் மேற்பட்ட மீன்களை
கீறி எறிந்துவிட்டு,
மரங்களையும், பறவைகளையும் பற்றியே
பேசுகிருயே
மனிதர்களைப் பற்றிப் பேசமாட்டாயா?

அம்மணி!

மனிதத்தைப் பற்றிப் பேசியதாலும்,
எழுதியதாலுமே நான்
எனது மண்ணைவிட்டு
ஓடிவர நேர்ந்தது.
அதனுல்...?
மனிதர்களைப்பற்றி பேசுவதில்லையென்றே
தீர்மானித்துவிட்டாயா?

அப்படியென்று ஏதுமில்லை...!
கன்னத்தில் தெறித்த
மீன் ஊனை துடைக்கவும் முடியாத
நிலையில் நான்...!

நான் அழகானவளா?
என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?

பெண்ணே!


நீ அழகானவள் என்பதில்
எந்தப் பொய்யுமே இல்லை.
உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.
ஆனுல்,
நான்தான் உன்னை
ரசிக்கமுடியாத நிலையிலுள்ளேன்.

நீ ஒரு புதினமானவன்.
உனது பேச்சுக்கள் புதிரானவை.

மதியவுணவு இடைவேளைமணி
விடுதலையளிக்க அலறியது.
நாரிக் கடுப்பு இப்போ
முக்கியத்துவமற்றுப் போயிருந்தது.


## சுவடுகள் சந்தா விகிதம்

| | |
|---|---|
| நோர்வே, சுவீடன், டென்மார்க் | 300 NKR |
| ஐரோப்பிய நாடுகள் | 400 NKR |
| ஏனைய நாடுகள் | 500 NKR |
| வங்கிக் கணக்கிலக்கம் | 160752 13062 |




சுவடுகள் விளம்பர விகிதம்

| | |
|---|---|
| உள் அட்டை | 350 NKR |
| முழுப் பக்கம் | 250 NKR |
| அரைப் பக்கம் | 150 NKR |
| பின் அட்டை | 400 NKR |

தொடர்புகட்கு:
SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5
NORWAY

வங்கி மூலமாக மாத்திரமே பணத்தைச் செலுத்தி உதவவும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சியென்பது இரவல் வாங்கும் பலசரக்கல்ல;
மக்கள் தம்மைத்தாமே விடுவித்துக்கொள்ளும் புனிதமான யுத்தம்.

# இந்திய எதிர்ப்பும் அந்நிய சார்பும்

இது தேசிய விடுதலைப் போராட்ட காலகட்டம்; மரணப்படுக்கையில் இருக்கும் உலக ஏகாதிபத்தியமானது, காலனி நாடுகளிலுள்ள கோடானுகோடி மக்களை வெட்கங் கெட்ட தனமாக ஒடுக்கிக் கொண்டிருக்கும் காலகட்டம்; காலனி நாடுகளிலுள்ள விழிப்புற்ற மக்கள் அனைவரையும் தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல நிர்ப்பந்திக்கும் புரட்சிகர காலகட்டம்; இதற்கு விதிவிலக்காக இலங்கைக் காலனியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டம் இருந்துவிட முடியாது என்பது மறுக்கமுடியாத உண்மை.

இலங்கையின் பொருளாதாரமானது, சீரான வளர்ச்சி நிலையை எடுக்கமுடியாத நிலையில் அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடாகவும்; பல்தேசிய இனங்கள் வாழ்கின்ற, ஒரு மக்கள் விரோத ஜனநாயகமற்ற, பாசிச அரசைக் கொண்ட நாடாகவும் உள்ளது. குறிப்பாக தமிழ் - சிங்கள தேசிய இனங்களுக்கிடையே பகை முரண்பாட்டை வளர்த்தும், இனங்களுக்கிடையே ஐக்கியத்துக்கான வாய்ப்பை முற்றாக மறுத்தும் அழித்தும், இங்குள்ள ஏகாதிபத்திய அரசுகள் செயற்பட்டு வந்துள்ளன. இதன் காரணமாக இன்று தமிழ்த் தேசிய இனம் பிரிந்து செல்வதற்காக, தனது சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவதற்காக தவிர்க்கவியலாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடாத்தி வருகின்றது.

1983இன் இனக் கலவர வீச்சானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்தியப் பின்புலத்தின் காலடிகளில் சிக்க வைத்ததுடன் பரந்துபட்ட மக்களிடமிருந்தும் தூரவிலகி பிறவியிலேயே ஊனமுற்றதாகக் குறைப் பிரசவமாகிவிட்டது. இலங்கை அரசால் யுத்த தந்திர ரீதியாக தோற்கடிக்க முடியாதபடி கெரில்லாக் குழுக்கள் வளர்ந்த போதும், அரசின் மூர்க்கத்தனமான தொடர்த் தாக்குதல்களால் முகம் கொடுக்க முடியாத மக்களின் மனோநிலை, இந்திய அரசின் வரவை வெகுநாட்களாக

www.tamilarangam.net

வேண்டவே செய்தது. (காந்திஜீ பற்றியும் மற்றும் பங்களாதேஸ் விடுதலைப் போராட்டத்தின் உண்மைநிலைகள் பற்றிய தெளிவற்ற தன்மையும் இதற்குக் காரணமாக அமைந்தன.)

அண்மையில் நடந்தேறிய மிகப் பெரியதும், அரசுக்குப் பாரிய வெற்றியைக் கொடுக்காததுமான "விமோசன நடவடிக்கை" (Operation Liberation) என்ற வல்வெட்டித்துறைப் பச்சைக் கொலைகள், இந்திய அரசை நேரடியாகத் தலையிட வைத்ததுடன், மறுபுறம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை யுத்த ரீதியாகத் தோற்கடிக்க இயலாது என்பதை அரசுக்கு உணர்த்தியதுடன் ஒப்பந்தம் ஒன்றுக்கும் நிர்ப்பந்தித்தது. இந் நிலைமைகளின் விளைவாக கொச்சைத் தனமான, உப்புச் சப்பற்ற ஒப்பந்தம் ஒன்றைத் தமிழ் மக்களின் தலைகளில் வலுக் கட்டாயமாகத் திணிக்கும் துரோகச் செயலுக்கும் வழிவகுத்தது. இன்று நிராயுதபாணியாக, நிர்க்கதியாக விடப்பட்ட எம் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு யுத்தமானது, சாராம்சத்தில் புரட்சிகரமாகவுள்ள அதேவேளை, ஏதுமறியாது வீதிகளின் மரணங்களிலிருந்து விடுபட்டுக் கொள்ள இடைக் காலத் தீர்வொன்று அவசியமாக உள்ளது என்பதுவும் கண்கூடு. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் சீனப் புரட்சிகர வர்க்கங்களின் கூட்டு முன்னணியின் மக்கள் படையால் ஏகாதிபத்தியங்களும் ஆளும் வர்க்கங்களும் தூக்கி எறியப்பட்டு உலக வரலாற்றில் புதிய திருப்புமுனைகளை ஏற்படுத்தியிருப்பதை நாம் கணக்கில் எடுக்கவேண்டிய அதேவேளை, மறுபுறம் சமாதான பூர்வமான சந்தர்ப்பங்கள் இல்லாமல் போன வேளைகளிலும் நமது நாட்டில் அமெரிக்க ஏகாதிபத்தியமும், ரஸ்சிய சமூக ஏகாதிபத்தியமும் இயன்றளவு ஐக்கியத்தின் ஊடாக இந்த ஒப்பந்தத் துரோகத்தில் கணிசமான அளவு பங்கேற்றுள்ளது என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது.

– ஜனகன் –

இவ்வாறு நிலைமைகள் சிக்கலாகி தேசிய விடுதலை கண்ணுக்குப் புலப்படாதபடி ஆழமாகி, திசை மாற்றப்பட்டுள்ள அதேவேளை தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஏதாவது ஒரு ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறியும் போராட்டமாகி பிறிதொரு ஏகாதிபத்தியத்துக்குத் துணைபோவதை "தேசிய எதிர்ப்பு யுத்தம்" என்று யாராவது சொல்வார்களானுல் அவர்களை என்றே ஓர் நாள் வரலாறு சாக்கடையில் தூக்கியெறியும் என்பதை உலக வரலாறு பலதடவை நிரூபித்துள்ளது. நாம் உண்மையான பகைவர்களைத் தாக்கி அழிப்பதற்கு, உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்தத் தவறி, ஏதாவதோர் ஏகாதிபத்திய சார்பு நண்பனுடன் கைகோர்த்து "எதிரியின் எதிரி நண்பன்" என்ற கோசத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஏகாதிபத்திய உள் முரண்பாடு காரணமாக ஒன்றை ஒன்று வெளியேற்றிக் கொள்ள நண்பனைப் போல் பாசாங்கு செய்துகொண்டு தமது காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள நப்பாசையுடன் தவித்தபடியும் புலம்பியபடியும் இருக்க, நாம் மனம்போன போக்கில் இவர்கள்பின் இழுபட்டுச் செல்வோமானுல் சாரத்தைவிட்டு சக்கையை விழுங்கிய ஈனப்பிறவிகள் என்ற கேலிக்கூத்துக்கு ஆளாவது தவிர்க்க முடியாததே.

www.tamilarangam.net

இன்றைய இந்திய எதிர்ப்பு யுத்தம் என்ற அடியாக உதித்தெழும் ஆரோக்கியமான அந்நிய எதிர்ப்பு யுத்தம் ஒன்றிலேயே வரலாற்றின் உந்துசக்திகளை அரங்குக்குக் கொண்டு வருவதையும், எம்மிடையே சிதறிக் கிடக்கும் ஆயிரமாயிரம் நண்பர்களை ஐக்கிய முன்னணிக்குள் கொண்டு வருவதையும் நிறைவுசெய்ய முடியும். (இதனூடாகவே தமிழ் - சிங்கள தேசிய இனங்களுக்கிடையிலான ஐக்கிய வாய்ப்புகளையும் பலப்படுத்த முடியும்) உண்மையான நண்பர்களைக் கொண்டு கட்டப்படும் ஐக்கிய முன்னணி ஒன்றிலேயே ஏகாதிபத்தியங்களின் சுற்றி வளைப்புக்குள்ளும் தாக்குப் பிடித்து, கூட்டாக இரு ஏகாதிபத்தியங்களையும் எமது நாட்டைவிட்டு மூச்சாகத் துரத்தியடிக்க முடியும். இவ்வாறு புனித யுத்தத்துக்குக் கடின உழைப்பும் நெஞ்சுறுதியும் கொண்ட உழைக்கும் மக்கள் படையின் தன்மையாலன்றி வேறெதனாலும் இப்பணியில் சஞ்சலமின்றி ஓரடியேனும் முன்னேறிச்செல்ல முடியாது என்பதை கடந்த காலங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. இவ்வாறல்லாத எந்தவொரு எதிர்ப்பு யுத்தமும் அந்நிய சார்பு நிலையையே கொண்டிருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## இலக்கிய சந்திப்பு...

மேற்கு ஜேர்மனியில் சஞ்சிகை ஆசிரியர்களும், வாசகர்களும் கலந்துகொள்ளும் "இலக்கியச் சந்திப்பு" நிகழ்ச்சி ஆறுவது தடவையாக மேற்கு பேர்லின் நகரில் இடம்பெற்றது. டிசம்பர் 22, 23, 24ம் திகதிகளில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் படைப்பாளிகளும் அறிஞர்களும் விமர்சகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

'மொழியும் எழுத்தும்' (பேராசிரியர் சிவசேகரம்- லண்டன்), 'தமிழரின் புலப்பெயர்வுகள்' (வ.ஐ.ச. ஜெயபாலன்- நோர்வே), 'சமதர்மக்கனவு- அன்றும் இன்றும்' (பேராசிரியர் சண்முகரத்தினம்- நோர்வே), 'சிறுகதை இலக்கியம்' (சிவேந்திரன்- ஜேர்மனி), 'ஒல்லாந்தில் தமிழர்கள்' (பத்மமனோகரன்- ஒல்லாந்து), 'மலையகத் தமிழர்கள்' (நித்தியானந்தன்- ஜேர்மனி), 'மேடை அனுபவங்கள்' (பாலேந்திரா, ஆனந்தராணி- லண்டன்), பெண்ணிலைவாதம் (ரஞ்சனி, உமா- ஜேர்மனி, தயாநிதி- நோர்வே, லக்ஸ்மி- பிரான்ஸ்) போன்ற விடயங்களில் உரைகளும் கருத்துப் பரிமாறல்களும் இடம்பெற்றன.

ஜேர்மனியிலிருந்து வெளியாகும் தூண்டில், சிந்தனை, தேனி, புதுமை, வெளிவரவுள்ள அக்னி ஆகிய சஞ்சிகைகளுடன் முதன்முறையாக நோர்வேயிலிருந்து வெளியாகும் சுவடுகள், ஒல்லாந்திலிருந்து வெளியாகும் 'அஆஇ' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் வாசகர்களுடன் சஞ்சிகைகளின் விமர்சனங்களைக் கலந்துரையாடினர்.

மேற்கு ஜேர்மனியில் இசையமைக்கப்பட்ட தமிழ்ப்பாடல்களும், கவிதாநிகழ்வும் (ஆதவன்- டென்மார்க், இளவாலை விஜயேந்திரன்- நோர்வே, ரஜீன்குமார்- மேற்குஜேர்மனி) இடம்பெற்றன.

- அபிமன்யு -

## பிறந்த நாள் விழாக்களா?

## கலை நிகழ்ச்சிகளா?

## திருமண வைபவங்களா?

ஒரே நாளில் முடிந்துவிடும் இந்த நிகழ்ச்சிகளை வாழ்நாள் முழுவதும் நினைவுகூர, இந்த நிகழ்ச்சிகளைத் தரமான முறையில் ஒளி, ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள்.

தரமான முறையில் ஒளி, ஒலிப் பதிவுடன் சிறந்த முறையில் வீடியோப் படப்பிடிப்பு மேற்கொள்ள நோர்வேயின் எல்லாப் பகுதிகளில் உள்ளோரும் நினைவில் வைத்திருக்கவேண்டிய ஒரே இடம்.

**THANGAM VIDEO VISION,**

**S.JEGANATHAN,**
**LUTVANNS VEIEN,33,**
**0676,OSLO 6**

தொலைபேசி இலக்கம் 02/325504

திருமண வைபவங்களுக்குத் தேவையான மணவறை, அலங்காரப் பொருட்கள் யாவும் குறைந்த வாடகைக்கு வழங்கப்படும்.

அழகான முறையில் திருமணப் பத்திரிகைகள் அச்சடிக்க எங்களை நாடுங்கள்.

***** தங்கம் வீடியோ விஸன் *****
**நோர்வே**

www.tamilarangam.net

# இப்படியா சந்திப்பது?

நள்ளிரவு முழுநிலவின் கதிரொளி எங்கும் முழுமையான பகல் விரித்திருந்தது.

உயிரினம் அமைதியாய் துயிலும் வேளை.

அமைதியிலா உள்ளங்கள் தவிக்கும் வேளை.

பசிக்கொடுமை தீர்க்க விலங்கினம் வேட்டையாடும் வேளை.

கொடுமை நிறைந்த மானுடனே பகைவனைப் பழிதீர்க்கும் வேளை.

பற்றையுள் சலசலப்பு, காலடிச் சத்தம்; திடீரெனத் துப்பாக்கியை நீட்டியபடி எதிரெதிரே இரு உருவங்கள். தென்னங் கீற்றிடை வடிந்த நிலவு ஒருவனின் முகத்துக்கு ஒளியூட்டியது.

"குமார்!" வியப்பில் ஒலித்தது ஒரு குரல். குரல் கேட்ட அளவில் முகம் பார்க்க முன்னரே "ரஞ்சித் நீயா?" வியப்புடனும் கனிவும் குழைந்து ஒலித்தது மறுகுரல்.

எதிரெதிரே துவக்கேந்திய நிலையில் கண்ணோடு கண் நோக்க இரு உருவங்களும் மௌனத்தில் மரத்து நின்றன.

ஆண்டுகள் பின்னோக்கி உருண்டன.

இதேபோன்ற பால்நிலவில் தென்னங் கீற்றுகள் காற்றில் சலசலத்து நிழலும் ஒளியும் மாறிமாறிக் காட்ட அவற்றிடை குமாருடன் ஒளித்து விளையாடிய காட்சிகள் ரஞ்சித்தின் சிந்தனையில் ஓடின.

0 0 0

தென்னிலங்கையிலே சோலை போன்றதோர் அழகிய கிராமம். அருகருகே இரு குடும்பங்கள். மக்கட் செல்வத்தால் நிரம்பிய இல்லங்கள் இரண்டுக்கும் வறுமை பொதுச் சொத்து. வறுமையால் வாழ்வு வளம் பெறுதுவிடினும் மனம் வளம்பெற்று விரிந்தது. அன்பிற்கும்



www.tamilarangam.net

அடைக்கும் தாள் இருக்கவில்லை. குறுகிய சுவர்களும் அங்கு நிலைக்கவில்லை.

வைகாசி முழுநிலவின் போது குமாருடன் சேர்ந்து "வெசாக்" கூடுகள் செய்து மகிழ்ந்த நாட்கள் எத்தனை! தை மாதத்தில் முற்றத்தில் பால் வழியப் பொங்கல் பொங்கிய நாட்கள்தான் எத்தனை!

ரஞ்சித்தின் சிந்தனை தடைப்பட்டது. "ரஞ்சித் போய்விடு!... நிற்காதே, ஆபத்து ஓடு! ஓடு!" தாழ்ந்த குரலில் பதறினுன் குமார். அக்கணம் "டுமீல்" என்று இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒலித்தது துப்பாக்கி. இரத்த வெள்ளத்தில் சுருண்டான் குமார். அவனை நோக்கித் தாவினுன் ரஞ்சித். இரு முரட்டுக் கரங்கள் ரஞ்சித்தின் தோள்களைப் பற்றின. "அவன்

## — ஞானம் —
## அவுஸ்திரேலியா

நிச்சயம் செத்துப்போனுன், பார்க்கத் தேவையில்லை வா போவோம்"

ரஞ்சித்தைப் பலவந்தமாக இழுத்துச் செல்ல வேண்டியதை உணர்ந்த அவன் தோழன், "என்ன ரஞ்சித் உனக்குப் பைத்தியமா? அவன் புலி எண்டதை நீ கவனிக்கேலையா? ஏன் உடனே சுடவில்லை? நான் அவனைச் சுட்டிருக்காவிட்டால் அவன் உன்னுயிரைக் குடித்திருப்பானே!"

கால்கள் பின்னத் தடுமாறிச் சென்ற ரஞ்சித்தின் செவிகளில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் "குமாரா! என்னுயிரைக் குடிப்பாஞ? என்னுயிரைக் காப்பாற்றவல்லவா பதறினுன்! ஐயோ, என்ஞல் அவன் உயிர் போய்விட்டதே!" என உள்ளங் குமுறிக் கொந்தளித்தான்.

ரஞ்சித்தை இழுத்துச்சென்ற தோழன் அவனை ஜீப்பில் ஏற்றித் தானும் அவசரமாக ஏறினுன். ஜீப் புறப்பட்டது. ரஞ்சித்தின் உள்ளம் பதறியது. முன்ஞேர் நாள் குமாருடன் ஆற்றில் நீந்திப் பழகியபோது, தான் நீர்ச் சுழியில் சிக்கியதும் குமார் தன்னைக் காப்பாற்ற வந்து இருவருமே மூழ்கவேண்டி நேரிட்டமையும் ரஞ்சித்தின் நினைவில் எழுந்தது. யாரோ ஒருவன் இருவரையும் கரை சேர்த்தான். "என்ன மடத்தனம் குமார், உனக்கு நீந்தத் தெரியாது; நீ எப்பிடி என்னைக் காப்பாற்றத் துணிஞ்சாய்?" என்று கேட்டபோது, "அதஞல் என்ன ரஞ்சித், முடிந்தால் காப்பாற்றியிருப்பேன், இல்லையெண்டா நீமட்டும்போக நான் பார்த்துக் கொண்டிருப்பேனே!" என்று சிரித்தானே குமார்.

ரஞ்சித்தில் நெற்றி அனல் கக்கியது. மூச்சுத் திணறியது. "ரஞ்சித் உனக்கு என்ன சுகமில்லையா? சாய்ஞ்சு படுத்திரு"

நிலவை வெறித்துப் பார்த்தான் ரஞ்சித்.

குமாரின் தகப்பஞர் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியதும் அவர்கள் குடும்பம் வடக்கே தங்கள் கிராமத்துக்குப் போகப் புறப்பட்டது. நண்பர் இருவரும் துயரோடு பிரிந்தனர்.

"நீ எங்கோ நான் எங்கோ, இனி எப்போது பார்ப்பது" என்று கவலையுடன் ரஞ்சித் சொன்னபோது குமார் சொன்ன பதில் "கவலைப்படாதே ரஞ்சித், நாம் மீண்டும் சந்திப்போம். சாகுமுன் கட்டாயம் உன்னைச் சந்திப்பேன்"

பகவானே! இப்படியா சந்திப்பது?

உள்ளத்துற் சுமை தாங்காது சாய்ந்தான் ரஞ்சித்.

ஜீப் ஓடிக்கொண்டிருந்தது.

வெண்ணிலவும் கருமுகிலுள் மறைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வாசகர்கள் விமரிசிக்கிறார்கள்!

சுவடுகளின் முதல் பன்னிரு இதழ்கள்பற்றிய விமர்சன அரங்கு ஒக்டோபர் மாதம் 15ஆந் திகதி தமிழ்- நோர்வே மக்கள் இணைவு கூடத்தில் நிகழ்ந்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வாசகர்கள் பங்குபற்றியதுடன், ஆரோக்கியமானதும், காத்திரமானதுமான விமர்சனங்களை முன்வைத்தனர். சுவடுகள் வாசகர்களின் கருத்துகளை அறிந்துகொள்ள இது வாய்ப்பளித்ததுடன், நோர்வேயில் இலக்கியம்பற்றி கலந்துரையாட முதல் தளமாகவும் அமைந்தது.

பேர்கனில் இருந்து வந்திருந்த வாசகர் மலநாதன் அரங்கைத் தலைமையேற்றார். லம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே கருத்துப் பரிமாறலுக்கு வழிசமைக்கும் சஞ்சிகைகள் என்ற ரீதியில் தடங்கல்களையும் எதிர்ப்புகளையும் மீறி ஒரு வருடம் சுவடுகள் வெளிவந்ததைப் பாராட்டிய அவர் எம்மிடையே வளரும் சரியான விவாதங்கள் மூலம் கருத்தொன்றுபட்டு எமது தேசிய விடுதலையையும் சமூக விடுதலையையும் உறுதியாக நம்புவோர் இணைந்து பணியாற்றவும் தாய்நாட்டில் அவ்வாறன சக்திகளுடன் இணையவும் வேண்டும் என்ற தனது விருப்பை வெளியிட்டார்.

சுவடுகள் தனது சமூக, அரசியற் கண்ணோட்டம் பற்றி தெளிவாக வரையறுக்க வேண்டும் என வலியுறுத்திய அவர், இதற்கு இயக்க சார்பான முத்திரை குத்தப்படும் என்று அஞ்ச வேண்டியதில்லை எனவும், ஏனெனில் சுவடுகள் சரியான அரசியல் பார்வையை வெளிப்படுத்தினால் இன்று எந்த இயக்கத்தையும் சுவடுகள் சார்ந்திராது எனவும் கூறினார். நடிகைகளின் படங்கள், தெளிவற்ற படம் என சிலவேளைகளில் பிரசுரமாவது சுவடுகளின் ஆக்கங்களைப் பாதிக்கும் என்றார் அவர்.

பேர்கனிலிருந்து சிவரஞ்சித் அரங்கிற்காக எழுதி அனுப்பியிருந்த விமர்சனம் அரங்கில் வாசிக்கப்பட்டது. சஞ்சிகை என்பது அடிப்படையில் பிரச்சார ஊடகமேஎன வலியுறுத்தியஅவர், சுவடுகள் எதைப் பிரச்சாரப் படுத்துவது என்ற தெளிவு இல்லாவிடில் உழைப்பு, சக்தி, பணம் எல்லாமே வீண் விரயமாகும் என்றார். 87க்குப் பின் தாய்நாட்டில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள்பற்றி விளக்கமளித்து சூழலைச் சரியான முறையில் கிரகித்து புரட்சிகர அரசியலை சுவடுகள் பிரச்சாரம் செய்வது அவசியம் என்றார் அவர். தேச விடுதலைப் போராட்ட அனுபவங்களைத் தொகுப்பது, இலங்கையின் சமூக அமைப்புப்பற்றிய கட்டுரைகள், முற்போக்கு கலை இலக்கியங்களைப் பிரசுரித்தல் அவசியம், சுவடுகளின் சில ஆக்கங்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்கங்களின் பற்ருக்குறையால் போடப்பட்டதாக உணர்கிறேன். சிலபடங்கள் ஆனந்தவிகடன், குமுதத்தை நினைவுபடுத்துவது நல்லதல்ல. ஐரோப்பிய சஞ்சிகைகளில் சுவடுகள் அமைப்பிலும் தரத்திலும் நன்ருக இருக்கின்றது என்று பாராட்டினுர் அவர்.

தொடர்ந்து விமர்சனத்தை முன்வைத்த சர்வேந்திரா, பன்னிரு இதழ்களிலும் வளர்ச்சி தெரிவதாகவும், சிரமங்களைத் தாண்டி வெளிவருவது பாராட்டப்படவேண்டியதும் என்ருர். சுவடுகளின் அரசியல், சமூக நிலைப்பாடு பற்றிக் கேள்வி எழுப்பிய அவர் தெளிவான நிலைப்பாடு இல்லாவிடின் நடைமுறை ரீதியாக சிக்கல் ஏற்படும் என்ருர். அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் சுவடுகள், தனது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தாமல் இருப்பது ஒருவகையில் நேர்மையீனமே, பக்கசார்பற்ற நிலை என்ற ஒன்றில்லை, கருத்தற்றவர்கள் தான் நடுநிலையாக இருக்க முடியும் என்று தொடர்ந்த அவர், சுவடுகள் அரசியல், சமூக நிலைப்பாடு ஒன்றைப் பற்றிக்கொண்டு வெளிவரவேண்டும் என்ருர்.

சுவடுகளின் படைப்புகள் எந்த ரீதியில் தெரிவாகின்றன என்று கேள்வியெழுப்பிய அவர், சுவடுகளில் வெளிவந்த கவிதைகள் குறிப்பிடத்தக்கவை என்றும், இவை தொகுப்பாக வெளிவரலாம் என்றும் தெரிவித்தார். சிறுகதைகளில் பெரும்பாலானவை சொந்த அனுபவ வெளிப்பாடுகள் எனத் தான் கருதுவதாகவும், வளர்ந்துவரும் எழுத்தாளர்களின் படைப்புகள் என்ற ரீதியில் இவை அங்கீகரிக்கத்தக்கவை என்றும் கூறினுர். பெண்களுக்கு ஒரு பகுதியை ஒதுக்குவதோடு மட்டுமன்றி, ஆசிரியர்குழு மட்டத்திலும் பெண்களின் பங்களிப்பு உறுதி செய்யப்படுவது அவசியம் என்ருர் அவர். கலை, இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய விவாதங்கள் வெளிவருவது சுவடுகளைத் தரமாக்கும் என்று கூறினுர் சர்வேந்திரா.

முகமிழந்து இங்குவாழும் எம்மிடையே சுவடுகள் வெளிவரத் தொடங்கிய 12மாதங்களும் குறிப்பிடப்பட வேண்டியவை என்று கூறித் தனது விமர்சனத்தை ஆரம்பித்த பால.இரவி இங்குள்ள கலைஞர்கள், இலக்கியவாதிகளை ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாக்கியது சுவடுகளே என்ருர். அரசியல் வேறுபாடுகளை மறந்து கலைஞர்கள் ஒன்ருகும் சூழல் உருவாகி வருகின்றது, இதற்கு சுவடுகளும் அதன் தாய் அமைப்பான இணைவுகூடமும் வழங்கிய பங்கு குறிப்பிடத் தக்கது என்ருர் இரவி.

நோர்வேயில் எமது வாழ்வு பற்றி அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சொல்ல சுவடுகள் பணியாற்றுவதை பாராட்டிய அவர், நடையர் பார்வை, சுளுப்பாளு என்பவை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ருர். அரசியற் கட்டுரைகள் சிலவற்றில் அரசியல் தெளிவுபெறும் வகையில் முடிவுகள் அமையாதது சுவடுகளின் அரசியல் நிலைப்பாடுபற்றி சந்தேகத்தை எழுப்புவதாகவும், தொலைநோக்குடன் அரசியற் கட்டுரைகள் அமையவேண்டும் எனவும் குறிப்பிட்டார். சர்வதேச ரீதியில் போராட்ட வரலாறுகளையும் கலைஞர்களையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வது சுவடுகளின் பணி என்ற பாலஇரவி இங்கு நிகழும் கலை, இலக்கிய நிகழ்வுகளை விமர்சிப்பதன் மூலம் சுவடுகள் செழுமையடையும் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* சுவடுகளுக்கான சந்தாவை அனுப்பிவைத்த வாசகர் அனைவருக்கும் நன்றி. சுவடுகளை வளர்ப்பதில் நீங்கள் காட்டிவரும் அக்கறைக்கு நன்றி. உங்கள் நண்பர்களிடமும் சுவடுகளை அறிமுகம் செய்யுங்கள். சுவடுகள் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வையுங்கள்.

● சுவடுகள்.

தான் நம்புவதாகவும், சுவடுகளை வளர்ப்பதற்கு வாசகர்களின் பங்கை உறுதிப்படுத்தியும் கருத்துத் தெரிவித்த அவர், சுவடுகளில் பங்களிக்காமல் விடுவது எமது தேசம், எமது விடுதலைபற்றி சரியான வழியில் செல்ல உதவாது என்றார். சுவடுகள் மூலம் ஐக்கியமும் தேடலும் அவசியமானவை என்றார் அவர்.

தொடர்ந்து தேவகுமார், அரசியல் சக்திகளுடன் பேசிய அளவுக்கு சுவடுகளின் கட்டுரைகள் மக்களுடன் பேசவில்லை என்றார். சிறுகதை, கட்டுரைகளில் உறுதியான தீர்வுகள் வைக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியதோடு சுவடுகள் கூறிவரும் 'நடுநிலமை' என்று ஒரு பத்திரிகைக்கு இருக்கமுடியாது, நடுநிலமை என்பதை ஐக்கியம் நோக்கிய நடுநிலை என்று விரிவாக்கலாம் என ஆலோசனை கூறினர்.

சமூக விடுதலையை முதன்மைப்படுத்துவதால் சுவடுகள் தூக்கி எறியப்படுமா என்று சந்தேகம் உள்ளது, தேசிய விடுதலையின் உச்சத்தை தாங்கிவரும் சஞ்சிகை ஒருபோதும் தூக்கி எறியப்படாது, எம்மிடையே தேசிய விடுதலை, சமூக விடுதலைபற்றிய தெளிவின்மையே இதற்குக் காரணம், இவையிரண்டும் பிரித்துப் பார்க்கப்பட முடியாதவை என்றார் தேவகுமார்.

சுவடுகள் ஆசிரியர்கள் இதைத் தொடர்ந்து தமது கருத்துக்களை முன்வைத்தனர். குளிர்நிறைந்த நிலக்கீழ் அறைகளில் தட்டச்சுடன் ஆரம்பித்த சுவடுகள், வளர்ந்து இன்று அதன் எதிர்காலம்பற்றி இத்தனைபேர் கூடிப்பேசும் நிலை உருவாகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது என்று குறிப்பிட்ட சுவடுகள் ஆசிரியர்கள், தேச பக்தியையே சுவடுகள் தனது நிலைப்பாடாகக் கொண்டிருந்தது என்று கூறினர். இச்சந்தர்ப்பத்தில் சர்வேந்திரா, தேசபக்தி என்பது எல்லோர்க்கும் ஒரே மாதிரியானதாக இருப்பதில்லை, சுவடுகளின் மாறும் ஆசிரியர்களுக்கு ஏற்ப தேசபக்தி நிலைப்பாடு மாறுமா என்று கேள்வி எழுப்பினர். சுவடுகளின் கருத்துகள் சமகால அரசியல் மாற்றங்கள் தொடர்பாக சரியான முறையில் முன்வைக்கப் படவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

தேசபக்தியுடன், வேறுபட்ட கருத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடையவர்களின் கருத்துக்கும் மதிப்பளித்து, ஒவ்வொரு காலப் பகுதியையும் பிரதிபலிக்கும் விதத்தில் பரந்த ஊடகமாக சுவடுகள் தொழிற்பட விரும்பியது. இந்த நோக்கத்தை சுவடுகள் எவ்வளவு தூரம் அடைந்தது என்பது கேள்வியே, ஆனால் எம் அனைவரது பிளவுகளுக்கும் அப்பால் ஐக்கியம் நோக்கி நகர்வதற்கு இவ்வாறான இயங்குமுறை உதவும் என்பதே சுவடுகளின் கருத்து எனவும், நடுநிலை என்பது அணிசாரா நிலமை மாத்திரமே என்றும் ஆசிரியர் குழு தெளிவாக்கியது.

சுவடுகளை பக்கச் சார்பாகப் பார்க்கும் கண்ணோட்டமும் அதனால் நேரடியான அல்லது மறைமுகமான மிரட்டல்களும் கிடைக்கும் ஒரு சூழலுள்ளதை ஆசிரியர் குழு விளக்கியது. தேசபக்தி என்ற ஒரு பரந்த கருத்து வடிவத்தினூடாகவே ஐக்கியம் நோக்கிய செயற்பாட்டை நிகழ்த்த முடியும் எனவும், எமது ஐக்கியத்தினூடே எதிர்காலம் பற்றி வாசகர்களுக்கு நம்பிக்கை ஊட்டவும், எமது தேசத்தின் விடுதலை பற்றிய தேடலை மேற்கொள்ள முடியும் எனக் கூறப்பட்டது.

படங்கள் பாவிக்கப்படுவது, கூடுதலாக வாசகர்களைச் சென்றடையவே, ஓரிரு சந்தர்ப்பங்களில் நடிகையரின் படங்கள் பாவிக்கப்பட்டது எனினும் இனிவரும் காலங்களில் அதைத் தவிர்க்க முயல்வோம்.

ஐரோப்பாவில் கூட சில காலங்களுக்கு முன்னர் ஒருவர் ஏதாவது கருத்துத் தெரிவித்தால் அன்றிரவே அவர் தாக்கப்படும் நிலை இருந்தது. சில வேளை அந்த நிலை இன்றும் இருக்கலாம், அந் நிலையை மாற்றவேண்டும். தனிமனித சுதந்திரம் அதிகமாகப் பேணப்படும் இந்த நாட்டில், வாசகர்களுக்கு கருத்துப் பரிமாற்றம் பற்றி நம்பிக்கை ஊட்டுவதன் மூலம் ஐக்கியம் நோக்கி நாம் எதிர்காலத்தில் செல்லமுடியும் என நம்புவதாக சுவடுகள் ஆசிரியர்கள் கூறினர்.

சுவடுகளை கருத்துப் பரிமாற்றத்துக்குரிய பொது ஊடகமாக பார்க்கும் போக்கு இன்னும் வளரவில்லை. எனினும் சுவடுகளை வாங்காதவர்களும் தேடி வாசிக்கக் காரணம் சுவடுகளில் உள்ள கருத்துகளை அறியும் ஆர்வமே. சுவடுகளில் வாசகர்களின் பங்குபற்றல் அவசியம். விமர்சனமே சுவடுகளை வளர்க்கும். சுவடுகளின் படைப்புகள் தெரிவாவது பிற்போக்கல்லாத கருத்துகளின் அடிப்படையிலும், காலத்தைப் பிரதிபலிக்கும் வகையிலுமே. பெண்கள் பகுதி ஆரம்பிக்கப்பட்டது பெண்களின் பங்களிப்பை உறுதிசெய்யவே. ஆசிரியர் குழு மட்டத்திலும் அப் பங்களிப்பு உறுதி செய்யப்படும் என்று ஆசிரியர் குழு தமது கருத்தை முன்வைத்தது.

விமர்சன அரங்கு நடந்த அதே தினம் வேறிரு நிகழ்ச்சிகள் இருந்த போதும் அரங்குக்கு கணிசமான தொகையினர் வந்ததும், வந்தவர்கள் பொறுமையாக இருந்து கருத்துகளைச் செவிமடுத்ததும், கோட்பாடுகள் தொடர்பாக கருத்துப் பரிமாறியதும், சுவடுகள் பற்றி நல்ல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதும் சுவடுகளின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஊட்டுகிறது.

தொகுப்பு: நந்தன்

www.tamilarangam.net

1989ம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசு திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. வருடாந்தம் வழங்கப்பட்டு வரும் சமாதானத்துக்கான நோபல் பரிசை நோர்வேயும், ஏனைய துறைகளுக்கான நோபல் பரிசுகளை சுவீடனும் வழங்கி வருகின்றன.

தலாய் லாமாவிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதை சீனாவைத் தவிர ஏனைய நாடுகள் பொதுவாக வரவேற்றுள்ள போதும் சீனாவுடன் அதிகளவு வர்த்தகத் தொடர்புகளை வைத்துள்ள பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமது ஆதரவை வெளிப்படையாகப் பகிரங்கப் படுத்தவில்லை. சமாதானத்திற்கான நோபல் பரிசை தலாய் லாமாவிற்கு வழங்குவதாக நோபல் பரிசுக் குழுத்தலைவர் 'ஈஜில் ஆர்விக்' அறிவித்த மறுநாளே ஒஸ்லோவில் உள்ள சீனத் தூதராலயம் தனது கடும் எதிர்ப்பை நோபல் பரிசுக் குழுவிற்கும், வெளிவிவகார அமைச்சிற்கும் அறிவித்தது. சீனத் தூதரகம் தனது எதிர்ப்பில் இந் நடவடிக்கையானது சீனாவின் உள்நாட்டு விடயத்தில் நேரடியாகத் தலையிடுவதாக அமைவதுடன், சீன மக்களின் உணர்வுகளுக்கு நோபல் பரிசுக் குழு மதிப்பளிக்கத் தவறி விட்டதாகவும் குறிப்பிட்டதுடன், திபெத் சார்ந்த சகல விடயங்களும் சீனாவுடன் தொடர்புபட்டதே எனக் கடுமையான முறையில் அறிவித்தது. இவ் விடயம் பற்றிப் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளித்த நோர்வே வெளிநாட்டு அமைச்சர் செல் பொண்டவிக் (Kjell M. Bondevik) சீனாவிடம் இருந்தும் கடும்



சஞ்சயன் -

# பரிசு பெறும் மதகுரு

www.tamilarangam.net

எதிர்ப்புக் கிடைத்திருப்பதாயும், எனினும் இது இரு நாடுகளின் உறவுகளைப் பாதிக்குமெனத் தான் கருதவில்லை எனவும் நோபல் பரிசுக் குழு யாருடைய தலையீடுமின்றிச் சுயமாய் இயங்குவதாகவும் குறிப்பிட்டார்.

சுமார் 30வருடங்களின் முன்னர் சீனு திபெத்தை ஆக்கிரமித்த போது அங்கிருந்து வெளியேறி இந்தியாவில் வாழ்ந்துவரும் 'தலாய் லாமா'வின் உண்மையான பெயர் டென்சின் கியாட் ஸோ ஆகும். தலாய் லாமாவின் 14வது வாரிசு இவராவார். நீண்ட காலம் இந்தியாவில் வசித்தபோதும் இவரே திபெத் மக்களின் ஏகோபித்த தலைவராக விளங்குகிறுர்.

1950ல் சீனுவினுல் ஆக்கிரமிக்கப்பட்ட திபெத் இன்றுவரை சீனுவின் ஆட்சிக்குட்பட்டு உள்ளது. ஆக்கிரமிப்பின் பின்னர் இன்றுவரை சுமார் 12லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். திபெத் தனது ஆட்சிக்குட்பட்டதே எனச் சீனு கூறிவருகிறது. திபெத்தின் அயல் நாடான இந்தியாவும் திபெத்தியர்களுக்குப் போதிய ஆதரவு காட்டவில்லை. இலங்கை, பாகிஸ்தானில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தில் அக்கறை காட்டிய இந்தியா திபெத் விடயத்தில் மௌனமே சாதிக்கிறது. தவிரவும் சீன இந்திய ஒப்பந்தங்களால் இந்தியா சீனுவுக்கு மறைமுக ஆதரவே வழங்கிவருகிறது.

சீனு ஆக்கிரமித்த நாளிலிருந்து திபெத்தில் 6254 மடங்களும் வரலாற்றுச் சின்னங்களும் அழிக்கப்பட்டன. கொல்லப்பட்டோரின் தொகை 12முதல் 14லட்சம் வரை இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த 40 வருடங்களாக திபெத் நாட்டின் கலைப் பொக்கிஸங்கள் என்று கருதப்படும் பல கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கி உள்ளது சீன ராணுவம். இவற்ருல் பாதிப்புற்ற திபெத்தியர்கள் கடந்த சில வருடங்களாகக் கிளர்ச்சி செய்துவருகின்றனர். இக் கிளர்ச்சிகள் யாவற்றையும் இராணுவச் சட்டத்தை அமுலாக்கிக் கொடிய முறையில் ஒடுக்கி வருகிறது சீனு.

தலாய் லாமாவுக்குப் பரிசு வழங்கப்பட்டமை தொடர்பாக விளக்கமளித்த பரிசுக் குழு திபெத்தைச் சீர்குலைக்கும் சீனுவின் நடவடிக்கையை எதிர்த்தோ, தியன்மென் சதுக்கத்தில் சீன மாணவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்தோ இந்தப் பரிசு வழங்கப்படவில்லை எனக் கூறியுள்ளது. இப்பரிசு வழங்கப்பட்டது பற்றி நோர்வே நாட்டவர் மத்தியிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

துருவச் சுவடுகள்: நோர்வேயில் வாழும் ஏழு தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுதி.
வெளியீடு: சுவடுகள் பதிப்பகம்
Herslebs Gate,43
0578, Oslo 5

சுவடுகள் பதிப்பகம்
ஒஸ்லோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மனத் திறப்புப் பற்றி ஓர் மனம் திறந்த கருத்து

"சத்தியமாய் திரும்பத் திரும்பத் திரும்ப கேக்கிறனெண்டு கோபப்படாதை மச்சான். இது நீ நல்லா அறிஞ்ச பிறகுதான் கதைக்கிறியா? என்னுல இன்னுந்தானடாப்பா நம்பேலாமல் கிடக்கு.

நான் வேறை யாரோ எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறன். இப்ப நீ சொன்ன பிறகு தானடாப்பா நம்மட ஆதவன் சார்தான் எண்டு எனக்குத் தெரியும். உண்மையா ஜீரணிக்கேலாமல் கிடக்கெடாப்பா."

இப்படி "ஒஸ்லோவில் ஓர் ஒன்றுகூடல்" என்ற தலைப்பில் ஆதவன் சாரின் மனத்திறப்பை படித்த சில உள்ளங்கள் ஆதங்கப்பட்டன (ஆதவன் சாரில் மதிப்பு வைத்துள்ள சில உள்ளங்கள்).

"சக்கரை ஜாஸ்தி; சாயா கம்மி" என்று சென்னை கோடம்பாக்கத் தெருவின் ஒரு மூலைப் பெட்டிக் கடையில் தேனீருக்குச் சொல்லிவிட்டு ஆதவன் சாரோடு மனந்திறந்து பேசியவைகள் இப்போதும் மறக்க முடியாதவை. 1984இல் "சேர் நானொரு கவிதைத் தொகுப்புக் கொண்டு வரலாமெண்டு நினைக்கிறன்; என்ன நினைக்கிறியள்?"

முன்னுல் கொண்டுவந்து வைக்கப்பட்ட அரைக் கிளாஸ் ரீயில் ஒரு மிடறு இழுத்துவிட்டு "போராட்ட பூமியில எல்லாம் முளைக்கட்டுமடாப்பா. காலப்போக்கில மக்களுக்குத் தேவையான கலைப் படைப்புகள் எல்லாம் வடிகட்டி மேல தங்கும். மற்றதெல்லாம் மறைஞ்சு போகும். உனக்கு ஒண்டு மட்டும் சொல்லுவன்; கலைப் படைப்புகள் எல்லாம் மக்களுக்கானது எண்டதக் கருத்தில கொள்ளு!"

இப்படி "கலை மக்களுக்கானது" என்ற கருத்தை எம் போன்ருேர்க்கு விதைத்த ஆதவன் சேருக்கு இப்போ "கலை கலைக்காக" என்று கூறுமளவுக்கு என்ன நேர்ந்தது?

ஆதவன் சாரின் இந்தக் கட்டுரை தொடர்பாக "இது சர்வேந்திராவுக்கும் ஆதவனுக்கும் இடையிலான பிரச்சனை அல்லது கருத்து முரண்பாடு என்று சொல்லி நாம் ஒதுங்கமுடியாது.

சுருங்கக் கூறின், கலைஞன் முதலில் ஒரு மனிதன். கலைஞனுக்கு ஒரு சமூகக் கடமையுண்டு. அதனை "கலை கலைக்காக" என்ற கருத்து நிராகரிக்கின்றது.

கலை கலைக்காக என்ற வாதம் ஆளும் வர்க்கத்துக்கும் அடக்குமுறையாளர்களுக்கும் சாதகமாய் அமையக்கூடிய அபாயத்தைக் கொண்டது. இவற்றை சீர்தூக்கிப் பார்த்து கருத்திற் கொண்டு, அன்று கலை மக்களுக்காக என்ற கருத்தைக் கொண்ட ஆதவன் சார் இன்று "கலை மக்களுக்காக என்று

www.tamilarangam.net

சொல்பவர்கள் எல்லாம் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள்; கலை கலைக்காகத்தான்" என்று கூறுமளவுக்கு அவருக்கு என்ன நேர்ந்தது?"

ஆதவன் சாரின் கூற்றுப்படி சமூகக் கடமையைக் கருத்திற் கொண்டவன் எல்லாம் மூளைச் சலவை செய்யப்பட்டவன்.

காலத்துக்குக் காலம் கருத்தை மாற்றிக் கொண்டு ஊசலாடும் மனநிலையில் இருக்கும் ஆதவன் சாரைப் பார்க்கும்போது உண்மையிலேயே அதீத விரக்திக்கு ஆளாகிவிட்டாரோ என்ற அச்சம் எமக்கு எழச்செய்கிறது.

இவை ஒருபுறமிருக்க...

"...கடைசியில் ஒரு மாணவன் 'தமிழ் நாடக வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக! என்ற ரியூற்ரேரியலுக்கு மறுமொழி சொல்லும் விதமாக அமைந்துவிட்டது' என்று ஆதவன் சார் சொல்கிறார். கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்ற பொருள்பட அமைந்த இந்தக் கருத்தை என்னால் மட்டுமல்ல பலராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் பதட்டமான சூழ்நிலைகளுள்ளும் அதிவேகமாக இல்லையெனினும் ஓரளவு நாடகக் கலைவடிவம் பல பரிசோதனை முயற்சிகளூடாக செழுமைப் படுத்தப்பட்டுப் படைக்கப் பட்டுள்ளன என்பதை ஆதவன் சார் ஒரேயடியாக மறுக்க முடியாது.

இவை சேரவேண்டிய விதத்தில் மக்களிடம் சேர்ந்திருக்கின்றன. கைப்புண்ணுக்குக் கண்ணடி எதுக்கு சார்? "நாடகத்தைப் பிரச்சாரப்படுத்து; இல்லாவிடில் எழுதாமல்... நடிக்காமல் அடங்கிவிடு என்ற நிர்ப்பந்தமும் இருந்தது, இருக்கிறது, இருக்கும்" என்ற ஆதவன் சாரின் கருத்தை முற்று முழுதாக ஏற்க முடியாது.

இயக்கத் தலையீடுகளின்றி, இயக்கம் சாராத பல படைப்புகள் வெளிவந்துள்ளன. (நாடகக்கலை மட்டுமல்ல- இயக்க சார்பற்ற ஓவியக் கலை, புகைப்படக் கலை போன்றவையும் இயக்கங்களின் ஒத்துழைப்புகளுடன் நடந்துள்ளன.)

"எண்பத்து மூன்றுகளுக்குப் பிறகு இயக்கம் சாராத நாடகங்கள் வரவில்லை, வரவும் முடியாது என்ற ஆதவன் சாரின் கருத்தை இம்மியளவும் ஏற்றுக் கொள்ள முடியாது. இயக்கத் தலையீடுகளின்றி படைப்புகள் வெளியாகித்தான் உள்ளன. படைப்புகளுக்கு சகல இயக்கங்களும் ஆதரவு வழங்கிய சம்பவங்களும் உண்டு. (உண்மையிலேயே இவை தெரியாமல் இருப்பின் ஆதவன் சார் கேட்டுத் தெரிந்துகொள்க:)

"சக்தி பிறக்குது; கருத்தை ரசித்தார்கள் என்பது சுத்தப்பொய்" என்று எந்த எடுகோளின் பெயரில் இப்படியொரு பொது முடிவை ஆதவன் சார் அடித்துக் கூறுவார்?

ஓரிரு மனிதனையாவது 'சக்தி பிறக்குது' கருத்துப் பற்றிக் கொண்டிருந்தால், ஓரிரு மனிதனுவது 'சக்தி பிறக்குது' கருத்துகளை உள்வாங்கி இருந்தால் எமது சமுதாய மாற்றத்துக்கான கணிசமான பங்கை அவர்களால் செய்யமுடியும். அவர்களூடாக 'சக்தி பிறக்குது' சமுதாய மாற்றத்துக்கான தனது கணிசமான பணியைச் செய்யும்.

குறைந்த பட்சம் 'சக்தி பிறக்குது' கருத்துகள் சமுதாய மாற்றத்துக்காக ஒரு மனிதனையாவது உருவாக்கித் தான்

www.tamilarangam.net

இருக்கும். இதனூடாக இந்தப் படைப்பின் கலைஞன் தனது சமுதாயக் கடமைகளைச் செய்கின்றான்.

அடுத்து இதனை காலத்தால் பிந்திய 'ஸ்கிறிப்ற்' என்று ஆதவன் சார் எதன் அடிப்படையில் கூறுகின்றார்? இந்தப் பிரச்சனைகள் காலத்தால் பிந்தியவை என்கிறாரா? இந்தப் பிரச்சனைகள் எமது சமுதாயத்தில் தீர்ந்துவிட்டன என்கிறாரா?

சரி, ஆதவன் சாரின் கூற்றுப்படி மக்களோடு அல்லாமல், மக்களின் பிரச்சனைகளில் அவர்களோடு நின்று முகம் கொடுக்காமல் வெறும் 'நோக்காளராக' சென்றுவந்த டொக்டர் சண்முகரட்ணத்தால் மிக அழகாகச் சொல்லக்கூடியதாக இருக்கலாம். ஆனால் இது காலத்தால் பிந்திய ஸ்கிறிப்ற் என்று எப்படிக் கூறமுடியும்? இந்தப் பிரச்சனைகள் தீர்ந்திருந்தால் சிலவேளை காலத்தால் பிந்திய ஸ்கிறிப்ற் என்று கூறமுடியும். பிரச்சனைகள் பிரச்சனைகளாகவே இருக்கும்போது அந்தப் பிரச்சனைகளைச் சொல்லும் படைப்பு எப்படிக் காலத்தால் பிந்திய ஸ்கிறிப்ற் ஆகமுடியும்? இவை மக்களைச் சுடும் பிரச்சனைகள் இல்லை என்பதை எந்தக் கருதுகோளின் அடிப்படையில் ஆதவன் சார் சொல்கிறார்?

இறுதியாக ஆதவன் சாரின்-

- "கலையின் தரத்துக்கு மக்களை உயர்த்தவேண்டும்" என்ற கருத்துக்கூட 'மக்களைப் பலாத்காரமாக கட்டி இழுத்துவந்து கலைகளைத் திணி! என்பதுபோல் உள்ளது.

கலைப்படைப்பின் தரத்துக்கு மக்களின் ரசனைத்தரத்தை உயர்த்தாதுவிட்டால் மக்களால் கலைப்படைப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடும்.

மக்களின் ரசனைத் தரத்தை உயர்த்துவது சமூகப் பொறுப்புள்ள, மக்களை நேசிக்கின்ற கலைஞர் கூட்டத்தினால்தான் செய்யமுடியும்.

மக்களுக்கான கலையை; மக்களிடமிருந்தும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் இருந்தும் கற்றுத்தான் படைக்க முடியும். சிகரெட் புகை வளையங்களுக்குள் மட்டும் தேடினால் அது கிடையாது. சமூகப் பணியைக் கருத்திற் கொண்டு செயற்படும் கலைஞனின் மக்களுக்கான கலைப் படைப்புகள் மக்களைச் சென்றடையத் தவறியதில்லை என்பதையும் நோட்டீஸ் அடிச்சு ஒட்ட வேண்டிய தேவையில்லை.


- தமயந்தி -
(ஸ்தவாங்கர்)

சுவடுகளில் வெளியாகும் படைப்புகளில் உள்ள கருத்துகள் படைப்பாளிகளின் கருத்துகளே. இவை சுவடுகளின் கருத்தாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

- சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரு.பி.எஸ்.சூரியநாராயண சென்னைப் பல்கலைக்கலகத்தில் அரசியல் ஆய்வாளராவர். இன்றைய சூழலில் இக்கட்டுரை முக்கியமாக கருதப்படுகிறது.

# இலங்கை: மாறி

பி.எஸ்.

இலங்கையில் நிலைமை மேலும் மேலும் விசித்திரமாக மாறிவருகிறது. ஜனாதிபதி பிரேமதாசவும், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் தங்களுக்குள் உடன்பாடு காண முயன்று வருகின்றனர். இந்திய அமைதிப் படையின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பிரத்தியட்ச நிலைமையைச் சமாளிப்பதற்கு அவர்கள், தங்கள் பழைய பகைமையை மறக்க முற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. சூழ்நிலை மாறியிருப்பதற்கு ஏற்ப இந்திய அரசும் வருங்காலத்தில் சரியான சந்தர்ப்பத்தில் புலிகளுடன் சமரசம் செய்துகொள்ளலாம் என்ற புதிய கருத்தைத் தன்னுடைய கொள்கையில் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் அரசியல் கொந்தளிப்புகளால் பிரேமதாசவின் அரசும் புலிகளும் நெருங்கிவர நேர்ந்தது. பிரேமதாசவுடன் புலிகள் ஏன் மும்முரமாகப் பேச்சு நடத்துகிறார்கள் - அதுவும் பெரும்பான்மை மக்களான சிங்களரின் முற்றுகைக்கு ஜனாதிபதி உட்பட்டிருக்கும்போது - என்பது மர்மமாக இருக்கிறது.

## ராணுவம் என்ன செய்யும்

தீவிர சிங்கள இன வெறி ஸ்தாபனமாகிய ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) புரட்சியின் மூலமோ வேறு வழியிலோ, அதிகாரத்தைக் கைப்பற்ற உறுதி கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் இலங்கை ராணுவம்கூட திடீர்ப் புரட்சி நடத்த ஆசைப்படலாம் என்று சுயேச்சையான அரசியல் பார்வையாளர்கள் நினைக்கின்றனர். ராணுவத்தின் பல்வேறு பிரிவுகள் பல திடீர்ப் புரட்சிகளை நடத்துவதுகூடச் சாத்தியமே என்று அரசுடன் நெருக்கமுள்ள சில பார்வையாளர்கள் கருதுகின்றனர். இவையெல்லாம் யூகங்களே. எனினும், இலங்கை, இந்திய அரசுகளோ, புலிகளோ இவற்றை அடியோடு புறக்கணிப்பதற்கில்லை.

இன்னொருபுறம், இப்போதைக்கு ஜனதா விமுக்தி பெரமுனவின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இலங்கை ராணுவத்தின் எதிர்த் தாக்குதலும், ஜனதா விமுக்தி பெரமுனவை அடியோடு எதிர்க்கும் தனியார் படைகள் நடத்தும் கொலைகளும், ஜனதா விமுக்தி பெரமுன கொரில்லாக்களின் செல்வாக்கைக் குறைத்திருக்கின்றன. ஆனால், அரசியல் அரங்கில் ஜனதா விமுக்தி பெரமுன பின்னடையவில்லை; அதைப் பிரேமதாச புறக்கணிக்கவும் முடியாது. அதை சமரசப் பேச்சுக்கு இழுக்கும் அவருடைய முயற்சியை அதன்தலைவர் ரோஹணா விஜயவீர ஏற்கவில்லை. அவர் அண்மையில் தம்முடைய போர்த் தந்திரத்தில் ஒரு தாற்காலிக மாற்றம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

## ஜனதா விமுக்தி பெரமுன புதிய தந்திரம்

தேயிலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகள் போன்ற முக்கிய பொருளாதார இலக்குகளை அழிக்கும் நடவடிக்கையில் ஜே.வி.பி. இப்போது இறங்கியிருக்கிறது. ஏற்றுமதித் தேயிலையில் விஷத்தைக் கலக்கப்போவதாக புலிகளும் முன்பு பயமுறுத்தியதுண்டு. ஆயினும், தேயிலைத் தொழிலாளர்களிடையே அதற்குச் செல்வாக்கு இல்லாமையால் ஆபத்து ஏற்படவில்லை.

[நண்பர்கள் பகை... ள
களாகவும் மாறுவது இலங்கை
வத்திருக்கிறது. இதன்படி,
லைப்புலிகள் இடையேயும்
யூகங்களுள் இதுவும் ஒன்று.

---

ஆனால், தோட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு அருகாமையில் ஜனதா விமுக்தி பெரமுன இருப்பதால், அவற்றின் மீது திருட்டுத்தனமாய்க் குண்டுகளைவீச முடிந்தது.

பொருளாதார நாசவேலையில் ஜனதா விமுக்தி பெரமுன இறங்கியிருப்பதன் நோக்கம் என்ன? பொருளாதாரம் சீர்குலைந்தால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது சுலபம் என்று அது கருதுகிறது. அதோடு, பொருளாதாரம் சரிந்தால் ராணுவம் திடீர்ப் புரட்சியில் இறங்கலாம் என்றும் அது எதிர்பார்க்கிறதுபோலும்.

## புலிகளின் கணக்கு


விடுதலைப் புலிகள் தலைவர்களுக்கு இதெல்லாம் தெரியாமல் இருக்காது. அவர்களிடம் வேறொரு திட்டம் இருக்கக்கூடும். சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியின் வாயிலாக, இந்தியப் படையை வெளியேற்றவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அது பிரேமதாசவுடன் பேச்சு நடத்தத் தொடங்கியது. ஒருவிதத்தில் அதன்முதல் நோக்கம் நிறைவேறிவிட்டது. பிரேமதாசவின் நிர்ப்பந்தம் பேரில், இந்த வருஷம் டிசம்பர் 31-ம் தேதிக்குள் படைகளை வாபஸ் வாங்குவதாக ஒரு காலக்கெடுவை இந்தியா ஏற்றுக்கொண்டது. ஆனால், இது இன்னமும் ஜனதா விமுக்தி பெரமுனவைத் திருப்தி செய்யவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதியுடன் தீவிரப் பேச்சு நடத்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்றி
தினமணி 3.11.89.

# வரும் உறவுகள்

யநாராயண

ாகவும், பகைவர்கள் நண்பர் அரசியலில் சகஜமாக நிகழ்ந்து வருங்காலத்தில் இந்தியா, விடுத மறுபடி நேசம் ஏற்படுமா? பல

தினமணி ஆசிரியர்]

தன் மூலம் எத்தகைய பலனைப் பிரபாகரன் எதிர்பார்க்கிறார்? தம்முடைய ஸ்தாபனத்துக்கு 'சட்டபூர்வமான' வர்ணம் பூசுவதற்குத் தேவையான ஒரு அரசியல் அந்தஸ்தைப் பெறுவதற்கு அவர் விரும்புகிறார். பின்னர், ஏதாவது ராணுவத் தலைவர் திடீர்ப் புரட்சி நடத்தினால், தமக்கும் தமிழ்ப் பிராந்தியத்தில் 'சட்டபூர்வமான' அந்தஸ்து இருப்பதாக அவர் சொல்லிக்கொள்ளலாம். திடீர்ப் புரட்சித் தலைவரும் முதலில் கொழும்பில் தம்முடைய அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதில் முனைந்திருப்பாரே தவிர, விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்கு முற்படமாட்டார் என்று எதிர்பார்க்கலாம்.

ஜனதா விமுக்தி பெரமுன அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் தன்னுடன் அது மோதாது என்றும், சிங்களப் பகுதியில் தன் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதிலேயே ஈடுபட்டிருக்கும் என்றும் விடுதலைப் புலிகள் கருதக்கூடும். ஏற்கெனவே இந்த இரண்டு ஸ்தாபனங்களுக்கும் இடையே ஓரளவு ஒத்துழைப்பு இருப்பதாக இந்திய உளவு நிறுவனங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிகிறதே.

கொழும்புத் துறைமுகத்தில், ஜனதா விமுக்தி பெரமுனவின் கட்டுப்பாட்டில் உள்ள சில தொழிற்சங்கங்கள் விடுதலைப் புலிகளுக்குக் கள்ள ஆயுதங்கள் இறக்குமதியாவதை அனுமதித்ததாகச் சொல்லப்படுகிறது. இவற்றில் சில ஆயுதங்கள் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு ஒதுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தவிர, பிரேமதாசவைத் தாங்கள் நெருங்கிய பின்புரே இந்தியப் படைகள் வெளியேறத் தொடங்கின என்பதை ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உணர்த்தலாம். மொத்தத்தில், தங்கள் தங்கள் இனங்களின் 'உண்மைப் பிரதிநிதிகள்' என்ற முறையில் ஜனதா விமுக்தி பெரமுனவுடன் சம அந்தஸ்தில் அரசியல் உறவு கொள்வது விடுதலைப் புலிகளுக்குச் சாத்தியமாகலாம். இதைக் கருத்தில் கொண்டே, இந்திய அரசும், உரிய தருணத்தில் விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்துகொள்வதைத் தன்னுடைய கொள்கையில் ஒரு புதிய அம்சமாகச் சேர்த்திருக்கிறது.

## தில்லியின் திட்டம்

இந்தியா, தன்னுடைய சொந்த நலனைக் கருத்தில் கொண்டு, தனி ஈழக் கோரிக்கைக்குத் தன்னுடைய 'எதிர்ப்பை' வருங்காலத்தில் மாற்றிக்கொள்வது பற்றி யோசிக்கக்கூடும். ஆனால், இந்தியப் படை வெளியேறி, ஜனதா விமுக்தி பெரமுனவும், விடுதலைப் புலிகளும் இலங்கையைப் பிரிவினை செய்ய முயற்சிக்கும்போதுதான் இந்தியக் கொள்கையில் இத்தகைய பெரிய மாற்றம் ஏற்படமுடியும். அப்போது இந்தியப் படை அங்கு இருக்காது என்பதால் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்காது.

ஒரு சமயம் இந்தியாவும் விடுதலைப் புலிகளும் முறையே புரவலராகவும் பயன் பெறுபவராகவும் இருந்த நிலைமை பின்னர் மாறி, இரண்டும் எதிரிகள் ஆயின். அதேபோல் இரண்டும் மறுபடி நேச உறவை நாடுவதும் சாத்தியமே. தமிழ் ஈழ அரசை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் நட்பு பிரபாகரனுக்குத் தேவைப்படும். தமிழ்ப் பிராந்தியத்தில் உள்ள திரிகோணமலைத் துறைமுகம், பூகோள-அரசியல் ரீதியில், இந்தியாவுக்கு கேந்திரமானது. 29-7-87 அன்று ஏற்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தமும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் நட்பை ஜனதா விமுக்தி பெரமுன நாடாது. ஆனால் விடுதலைப் புலிகள் மீண்டும் இந்தியாவுடன் நட்புக்கொண்டால், திரிகோணமலையை இந்தியா தன்னுடைய செல்வாக்கு மண்டலத்தில் தொடர்ந்து வைத்துக் கொள்வதில் சிரமம் இருக்காது.

தன்னுடைய படையினருக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டதன் மூலம், திரிகோணமலையைத் தன்னுடைய செல்வாக்கு மண்டலத்தில் வைத்துக்கொள்ள உறுதி பூண்டிருப்பதை இந்தியா வெளிப்படுத்தியிருக்கிறது. இதை அமெரிக்காவோ சோவியத் யூனியனோ எதிர்ப்பதாகத் தெரியவில்லை. திரிகோணமலையைப் பற்றி நினைக்காமல் சிங்கப்பூரில் தன் கடற்படைக்குச் சில வசதிகளைப் பெறுவதற்கு அமெரிக்கா முயற்சிக்கிறது. இப்போதைய சூழ்நிலையில் சீனாவும் பாகிஸ்தானும்கூட திரிகோணமலைக்கு ஆசைப்படமாட்டார் என்று இந்திய அரசு நம்புவதாகத் தோன்றுகிறது. இந்தச் சூழ்நிலையில் தான், விடுதலைப் புலிகளுடன் மறுபடி உறவு கொள்வதற்கான புதிய கொள்கையை இந்தியா வகுத்து வருகிறது போலும்.

தமிழாக்கம்: சேட்ன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர் பிடுங்கிகளின் காலம்

கௌதமன்

"விடுதலை"க்கு வணக்கம்
"அமைதி"க்கு வணக்கம்
"ஜனநாயகத்துக்கு" வணக்கம்

மனிதத்துக்கு கண்ணீர் அஞ்சலி
பேச்சுச் சுதந்திரத்துக்கு இரத்த அஞ்சலி
எழுத்துச் சுதந்திரத்துக்கு வீர அஞ்சலி

என் கவிதை தொடங்குகிறது

கண்ணீரிலும் இரத்தத்திலும்
கரைகிற நம் வாழ்க்கையிலிருந்து....

இருட்டு; மிருகங்களுக்கு
ஒளி; மனிதருக்கு
அது முன்பு.

காலம் இப்போது தலைகீழாயிற்று
இருளும் ஒளியும் அரக்கர்க்காயிற்று

இருட்டிலும் கொன்று
ஒளியிலே எரித்து

போ, தலையிழந்த சூரியனே
போ, முகமிழந்த நிலவே.

தொலைபுலத்திருந்து
"நலமா? நாட்டு நிலைமை எப்படி?"
கடிதம் வரைவர் நண்பர்.

அவர்க்கோ
இரவல் நாட்டில் அந்நிய வாழ்வு.
எனக்கோ
சொந்த நாட்டில்
இரவல் இருப்பு.

இரவெலாம் விழிப்பு.
நண்ப,
நுனிமீசை பியர் நுரையில்
நனைய
அறிக்கை விடுகிறார்கள்;
"அராஜகம் ஒழிப்போம்"
நல்லதுதானே.
"அராஜக ஒழிப்பா? எப்போதிருந்து?"
சும்மா கேட்டேன்.

காற்றிலே சிரிக்கிறார்கள்.
சிரிப்பிலிருந்து சாம்பலும்
குருதியும் சிந்துகிறது.

குருதியும் சிவப்பு; குருதியிலூறிய அவர்
கொடியும் சிவப்பு; என்
கோபமும் சிவப்பு.

உயிரை அலைக்கழிக்கும்
வெய்யிலில்
எல்லா ராணுவமுகாம் வாசல்களிலும்
காத்திருக்கிறது தாய்மை.
சிதைந்த கனவுகளோடும்
உலர்ந்த நம்பிக்கைகளோடும்.

இராமன், இராவணன்
அனைவரும் சொல்வது
"இன்று போய் நாளை வா"

எரியும் இதயத்தில் எரியும்
ஈழமும்.

சுமைதாங்கி அருகில்
இன்னும் எஞ்சியிருக்கும்
மெல்லிய வெப்பத்துடன்
யாருடைய உடல் அது?

ஓ! ராணி
உன்னையுமா அம்மா?

"அஜாரக ஒழிப்பு"
உறுமிய குரலில் தடித்த மறுமொழி.
"அதென்னது அஜாரகம்?
அராஜகம் அல்லவோ சரி?"
சும்மா சொன்னேன்.
"மனிதப் புழுவே! கிண்டலா
உனக்கு?
நீதான் அஜாரகன்!
ஏறடா 'ட்றக்'கில்"
ஏறினேன்.

தத்துவவாதியாய்த்
தாடியை நீவிப்
பாவனை பண்ணிய நாட்கள்
போய்விட்டன.

'சிலோன் ஹெலி'யில் ஏற்றித்
தலைகீழாக்கி
'அவர்கள்' பிடுங்கி எறிந்தது போக
மீதி எத்தனை
என்று
இப்போ
மயிர் பிடுங்கி எண்ணுகிறேன்
தாடியில்.
ஆயிரமாய்
உயிர் பிடுங்கி எறியும் நாட்டில்
மயிர் பிடுங்க ஒரு கவிஞன்
இன்னும் மிச்சம்.
போதாதோ?


www.tamilarangam.net

www.tamilarangam.net

* உங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்கவும்,

* நகரின் மத்தியிலேயே உங்கள் பொருட் கொள்வனவைச் செய்து முடிக்கவும்,

* உங்கள் உணவுச் செலவையும், சிரமத்தையும் பெருமளவில் குறைக்கவும்



* நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் தபால் மூலம் உங்களுக்குத் தேவையான பொருட்களை உடன் அனுப்பிவைக்கிறோம். தொலைபேசி மூலமோ, கடித மூலமோ எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். மிகுதியை நாங்கள் செய்கிறோம்.

INTER TRADERS
STENERS GATE 18
( OSLO CITY பின்புறம்)
0184    0184 OSLO 1
தொலைபேசி இலக்கம்: 02/ 176218

www.tamilarangam.net

# இந்திய இலங்கை ஒப்பந்தம்: ஓர் அமெரிக்க சதி

வர்மன்



- ஒரு நூல் அறிமுகம்!

ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், இன ஒடுக்குமுறை போன்ற பல்வேறுபட்ட ஒடுக்கு முறைகளுக்கு எதிராக இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் சுதந்திரத்தினை வேண்டி புரட்சிகரப் போராட்டங்கள் ஒடுக்கப்படும் இனங்களாலும், மக்களாலும் நடாத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழீழ மக்களும் தம்மீதான ஒடுக்கு முறைகளுக்கும், ஆக்கிரமிப்பிற்கும் எதிராக சத்திய ஆவேசத்துடனும், ஆத்ம உணர்வுடனும் தேசிய விடுதலைப் போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர். இப் போராட்டமானது 1987 ஆடி 29ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் மிகவும் சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனை மையமாக வைத்துத் தமிழீழ சிந்தனையாளர்களில் ஒருவரான உதயன் என்பவரால் எழுதப்பட்ட நூலே "இந்திய - இலங்கை ஒப்பந்தம்: ஓர் அமெரிக்க சதி". இந்நூல் தமிழகத்தில் உள்ள 'ரோசா லுக்சம்பர்க்' படிப்பு வட்டத்தினால் 1989 பங்குனியில் வெளியிடப்பட்டுள்ளது.

உதயன் இந்நூலில் இவ் ஒப்பந்தத்துடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட இலங்கை, இந்தியா, அமெரிக்கா ஆகிய மூவரசுகளினதும் நோக்குகளையும், கபடத்தனங்களையும் தெட்டத்தெளிவாக விளக்கியுள்ளார். குறிப்பாக ஜே.ஆரினதும், அமெரிக்க அரசினதும் அரசியல் சாணக்கியங்களை விளக்கி, இவ்விரு அரசுகளும் இந்தியாவை எவ்வாறு தலைநிமிரமுடியாத அளவுக்கு பிரச்சனைக்குள் மாட்டி வைத்துள்ளன என்பதையும், ராஜீவ் காந்தி தனது அரசியல் பலவீனத்தினால் தமிழீழ மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் எவ்வாறு வரலாற்றில் மறக்க முடியாத ஒரு தீங்கினை இழைத்துள்ளார் என்பதனையும் மிக எளிமையான முறையில் சுட்டிக் காட்டியுள்ளார். இவ் ஒப்பந்தத்திற்கு ஆதரவளிப்பது என்பது இலங்கை, இந்தியா, அமெரிக்கா ஆகிய மூவரசுகளினதும் ஒடுக்குமுறைக்கு ஆதரவளித்தல் என்பதனைக் குறிப்பிட்டு, அமெரிக்காவினைப் பொறுத்து இவ் ஒப்பந்தம் இன்னுமொரு காம்ப் டேவிட் (Camp - David) ஒப்பந்தம் எனக் குறிப்பிட்டதினூடாக இவ் ஒப்பந்தம் பற்றிய முழுப் பரிமாணங்களையும் உதயன் வாசகர்களிற்கு விளக்கியுள்ளார். இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றிய உண்மை நிலையை நாம் அறிந்து கொள்வதற்கு இந்நூல் மிகவும் பயனுள்ள ஒன்றாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும், சர்வதேச அரசியல் பற்றியும் பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதிய உதயன் இதற்கு முதல் விஜயன் என்பவருடன் இணைந்து "இந்துமகா சமுத்திரமும், இலங்கை இனப் பிரச்சினையும்" என்ற நூலை எழுதியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பிய தமிழ் அகதிகள் மீது புதிய நாஜிக்கள் தாக்குதல்

இன்னும் எத்தனை கொலைவெறிக் கூட்டங்களுக்குத் தான் இலங்கைத் தமிழர்கள் தம் உயிரைக் காவு கொடுக்க வேண்டியிருக்கும்? சிங்களக் காடையர்களின் இனப்படுகொலைகள்; இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மக்கள் திரள் கொலைகள்; இனவிடுதலை முழக்கமிட்டுக் கிளம்பிய போராளி அமைப்புகள் துரோகத்தாலும், பாசிசத்தாலும் நஞ்சாகிப் போய் நடத்தும் அழித்தொழிப்புகள் - இவற்றில் இருந்து எப்படியோ தப்பித்து அந்நியதேசங்களில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர் வாழ்க்கை எப்படி உள்ளது?

உலகத் தமிழர்களின் தாயகம் என்று இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தமிழ் நாடு சொல்லப்படுகிறது. உலகத் தமிழினத் தலைவர்கள், காவலர்கள், தளபதிகள் என்று பட்டம் சூட்டிக்கொண்ட திராவிடக்கட்சிகள்

1983 ஜூலை இனப்படுகொலையைத் தொடர்ந்து லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். ஏற்கனவே 'தாயகம்' திரும்பிய மலையகத் தமிழர்களைக் கொத்தடிமைகளாக்கிய தமிழ்நாட்டில் பிறகு வந்த ஈழ அகதிகளுக்கு மட்டும் கௌரவமான வாழ்க்கை கிட்டுமா? திராவிடக் கட்சிகளின் பிழைப்புவாத அரசியலுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள்; ஈழப் போராளி அமைப்புகளிலேயே துரோகிகளாகவும், பாசிஸ்ட்டுகளாகவும் சீரழிந்த பிரிவினரின் வேட்டைக்கு இலக்கானார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தெற்கு ஆசிய ஆதிக்க, ஆக்கிரமிப்பு - விரிவாக்க நோக்கங்களுக்கான பணயக் கைதிகளாக - பகடைக் காய்களாக ஈழத் தமிழ் அகதிகளை பாசிச ராஜீவ் கும்பல் பயன்படுத்துகிறது.

உலகத் தமிழர்களின் தாயகம் என்று சொல்லப்படும் தமிழ்நாட்டிலேயே ஈழத்த

விடுதலை உணர்வும், புரட்சிகர உணர்வும குன்றாத அவர்களில் சிலர் சாத்தியமான அளவு சிறு அமைப்புகளாக இயங்குகின்றனர்.

அவற்றிலே ஒன்றுதான் சுவிசர்லாந்தில் வாழும் ஈழத்தமிழர்கள் நடத்தும் வாசகர் வட்டம். அதன் ''மனிதம்'' என்ற பத்திரிக்கையின் 1989 செப்டம்பர் இதழில் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ்களின் வாழ்நிலை மற்றும் அவர்களுக்கு எதிரான இயக்கங்கள் குறித்து எழுதியுள்ள பகுதிகளை இங்கே தருகிறோம்:

ஐரோப்பாவின் இயந்திர வாழ்வுடன்; எங்கள் வாழ்வியலுடன் எந்தவிதத்திலும் பொருந்த முடியாத சமூக புவியியல் சூழ்நிலையுடன்; நிர்ப்பந்தமாக எம்மை இணைத்திருக்கிறோம்.

ஓர் சமூகமாக ஒன்றிப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறோம். பல பத்து வருடங்கள் சென்றாலும் அரசியல் தஞ்சம் பெற்றவர்கள் உட்பட அனைவருமே இந்நாடுகளில் அரசியல் அந்தஸ்தை அதற்கான உரிமைகளை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது.

மறுபுறம்; கிட்லரினால் ஆரம்பித்த வழிநடத்தப்பட்ட தேசிய வெறியும், நிறப் பாகுபாடும் கொண்ட நாசிசக் கொள்கை புத்துயிர் பெற்று எம்மைத் துரத்திக் கொண்டிருக்கிறது.

எங்கள் பிள்ளைகளின்; சிறார்களின் நிலைமைகளோ வித்தியாசமானது. மேலும்

www.tamilarangam.net

மாறிமாறி ஆளும் மாநிலம் தமிழ்நாடு. இங்குதான் உலகிலேயே மிகக் கேவலமாக இலங்கைத் தமிழர்கள் நடத்தப்படுகிறார்கள்.

ஏற்கனவே, ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மலையகத் தமிழர்களில் பெரும்பாலானோர் 'தாயகம்' - தமிழ்நாட்டிலே கொத்தடிமைகளாக்கப்பட்டு விட்டனர். அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய் நிதியை, சேவை நிறுவனங்களையும், அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிழைப்புவாதிகள் சுருட்டிக் கொண்டனர். ஆலைகள் துவங்கி, மலையகத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதாகச் சொல்லி தமிழக ஆலை முதலாளிகள் கோடி கோடியாக ஏப்பம் விட்டனர்.

மிழர்களுக்கு இந்தக் கதி என்றால் நிறவெறி - இனவெறி பிடித்த காலனி ஆதிக்க, ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளவர்களின் நிலை என்ன? ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் அரபுநாடுகளிலும், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவர்களிலே பலரும் இன விடுதலை உணர்வும், புரட்சிகர உணர்வும் உள்ளவர்கள். ஈழப் போராளி அமைப்புகளின் துரோக, பாசிச நடவடிக்கைகள் காரணமாகவும் சிங்கள பேரின ஒடுக்குமுறை, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவக் கொலைவெறி ஆகியவை காரணமாகவும் ஈழத்திலிருந்து விரட்டப்பட்டவர்கள். தற்காலிகமான வேலைவாய்ப்புகளினால் ஒப்பீட்டு ரீதியில் வசதியாக' வாழ்பவர்கள். ஆனாலும், இன




கவிட்சர்லாந்தில் புதிய நாஜிகளின் இனவெறி ஆர்ப்பாட்டம்; வைகிங்-ஜுகெண்ட் கூட்டமைப்பின் குறியீடு.

சிக்கலானது! மேற்கத்திய சமூக வாழ்வுடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்ள முடியாமலும், எங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் சந்தர்ப்பத்தில் எங்கள் சமுதாய வாழ்வை பூரணமாக அங்கீகரிக்க மனமின்றியும், போதிய தமிழ் அறிவைப் பெற்றுக் கொள்ளாமையினாலும் எதிர்காலத்தில் விரக்திக்குட்பட்டுச் சீரழிந்து செல்லக்கூடிய நிலைமைகளில்தான் எங்கள் சிறார்கள் இங்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் அந்நிய மண்ணில் எங்களுக்கு எங்கள் குழந்தைகளுக்கு என்று ஓர் எதிர்காலம் அற்ற திறந்தவெளிச் சிறைக் கைதிகளாகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் இதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சுவிட்சர்லாந்து அரச மட்டங்களில் இருந்து வெளிவந்துள்ள கூற்று ஒன்றைப் பாருங்கள்!

"தமிழ் அகதிகளை நாம் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை. அதேவேளை அவர்களுக்கென்று ஓர் எதிர்காலமும் இங்கில்லை"

ஐரோப்பிய தமிழ் அகதிகள் இன்று ஒரு புதிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். புதிய நாஜிகளினதும் அதிதீவிர வலதுசாரிகளினதும் வளர்ச்சி இன்று அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் பல்வேறுபட்ட புதிய நாஜிக் குழுக்கள் உருவாகியுள்ளன. இங்கு முக்கியமாக நான்கு புதிய நாஜிக் குழுக்கள் உள்ளன.

(1) தாய்நாட்டு முன்னணி - இக்குழு சுவிட்சர்லாந்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றது.

www.tamilarangam.net

(2) புதிய முன்னணி - இக்குழு வின்டர்கர், ஞரிச், பாடென், பெர்ன், ஷாஃப்சென், ப்பூலாஷ் போன்ற பகுதிகளில் இயங்கி வருகிறது.
(3) சுவிட்சர்லாந்து தேசிய புரட்சிகரக்கட்சி
(4) மேற்கண்ட மூன்று குழுக்களும் அங்கம் வகிக்கும் வைகிங் ஜுஜெண்ட் என்ற கூட்டமைப்பு. மேலும் இக்குழு துணை இராணுவப் பிரிவுகளையும் வைத்துள் ளது குறிப்பிடத்தக்கது.

"ஜெர்மனியில் இருக்கும் 'தேசிய சோசலிஸ்டுகள்' போலவும் அமெரிக்கா வில் இருக்கும் கு குளக்ஸ் கிளான் (அமெ ரிக்க இனவெறி - வெறி அமைப்பு, புதிய நாஜிக்கள்) போலவும் நாம் இருந்தாலும், நாங்கள் நாஜிக்கள் அல்ல. மாறாக, தேசிய வாதிகள்" எனத் தெரிவித்துள்ளனர், தாய் நாட்டு முன்னணித் தலைவர்களான மார் செல்ய்ரேபெல் மற்றும் ஒட்டோ ரோய்லி ஆகியோர் "நமது போராட்டம் அகதிக ளுக்கு எதிரானதும் வெளிநாட்டவர்க ளுக்கு எதிரானதும் கம்யூனிசத்துக்கு எதிரா னதுமான துண்டுப் பிரசுரங்களை வெளியிடு வது" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சுவிட்சர்லாந்து தேசிய புரட்சிக்கட்சி 1989ம் ஆண்டு மார்ச்சு மாதம் பல்வேறு பட்ட குழுக்களை இணைத்து உருவாக்கப் பட்டது. இக்குழு ப்பூலாஷ், ஷாஃப்சென் போன்ற இடங்களில் தேர்தலில் குதிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

புதிய முன்னணிக்குழு தலைமறைவாக இருப்பதாகவும், தமக்கும் ஜெர்மனியில் இருக்கும் புதிய நாஜிக்களான சுதந்திர ஜெர்




புதிய நாஜிக்கள்; "மனிதம்" ஏட்டில் வெளியான படம்.

டும் அங்கம்வகிக்கிறான். (இவன்ஸ்பானிய பாசிச சர்வாதிகார ஆட்சி சார்பாக ஆயுதம் ஏந்தி போராடியவன்) இந்த ஒருங்கி ணைப்பு மகாநாடு சுவிலில் உள்ள ஃரெய் பர்க் நகரில் வழமையாக நடைபெற்று வரு கின்றது. மேற்கூறிய புதிய நாஜிக்களின் கருத்துக்களை உத்தியோகபூர்வமாக தேசிய செயல்கட்சி பிரதிபலிப்பு செய்கின்றது. அதன் நிறைவேற்றக்குழு அங்கத்தவரின் தபால்பெட்டி இலக்கமே தேசிய ஒருங்கி ணைப்புக் குழுவிற்கும் பயன்படுத்தப்படுகி றது.

இவ்வருடம் மே மாதம் கடைசி வாரத் விழாவிற்கு வந்தவர்களே செய்ததாக பல பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தியிருந்தன இரண்டு நாட்களுக்குப்பின் கண்டோன் ஜூக் குற்றத்தடுப்பு பொலீஸ் தலைமை அதி காரி 'ஜோசஃப் ருஸ்' பத்திரிக்கையாளரின் அபிப்பிராயத்திற்கு எதிராக அறிக்கை யொன்றை சமர்ப்பித்தார். தமிழர் மீதான தாக்குதலை புதிய நாஜிக்கள் நடத்தவில்லை யெனவும், இதனைத் தாய்நாட்டு முன்னணி யின் பேச்சாளர் தமக்கு உறுதியளித்ததாக வும், இத்தாக்குதலை சாதாரண குழப்பக்காரர் செய்திருப்பதாகவும் அவர் தனது அறிக்கை யில் தெரிவித்திருந்தார்.

www.tamilarangam.net

மனிய தொழில் கட்சியுடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இக்குழு சென்ற வருடம் நவம்பர் மாதம் ஒன்றுகூடிய போது உருவாக்கப்பட்டதாகவும் பேர்ன் நகரில் வாழும் ஒரு மின் ஊழியர் தெரிவித்துள்ளார். இவர்கள் "நட்புறவு" என்ற பத்திரிக்கையை வெளியிடுகின்றனர். நாஜிக்கள் ஆண்டபோது ஒரு யூதக்குடும்பம் ஹாலத்தில் தலைமறைவாய் வாழ்ந்த கதையை நாவலாக எழுதி, சுவிட்சர்லாந்தில் நாடகமாக்கி அரங்கேற்றிய போது இந்தப் புதிய முன்னணிக்குழு அரங்கில் புகுந்து குழப்பம் விளைவித்தது. இதை வரவேற்ற ஜெர்மனிய தொழில் கட்சி, புதிய முன்னணியைத் தனது சகோதர இயக்கமாக அறிவித்துள்ளது. இவை அந்த முன்னணியின் "நட்புறவு" ஏட்டிலே வந்த செய்திகள்.

இவ்வகையான புதிய நாஜிக்களின் ஒருங்கிணைந்த கோஷங்கள்: "சுவிட்சர்லாந்து சுவிஸ் நாட்டவர்களுக்குரியதே", "வெளிநாட்டவரே உங்கள் நாடுகளுக்குத் திரும்பிப் போ. தமிழனே வெளியேறு! யூதர்களே இஸ்ரேலுக்குத் திரும்பிப் போ! அங்கு உங்களுக்குப் போதிய இடம் உள்ளது" ஆகியன.

இக்குழுக்கள் அனைவரும் 1983ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய ஒருங்கிணைப்புக் குழுவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுவது வழமை. இந்த ஒருங்கிணைப்பில் சுவிட்சர்லாந்து இனவெறிக் கட்சியான தேசிய செயல் கட்சியும் அங்கம் வகிக்கின்றது. இந்த ஒருங்கிணைப்பின் உயர் மட்டக்குழுவில் 68 வயதுடைய காஸ்டன் அரோநோனேல் என்ற பழைய பாசிஸ்தில் கண்டோன்ஜூக் என்ற இடத்தில் உள்ள தமிழர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஒரு தமிழர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சுவிட்சர்லாந்திலுள்ள புதிய நாஜிக் குழுக்களும் அதிதீவிர வலதுசாரிகளும் மேலும் மேற்கு ஜெர்மனியிலுள்ள புதிய நாஜிக்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட விருந்துபசார விழாவினை 'தாய்நாட்டு முன்னணி' ஒருங்கமைத்திருந்தது. இவ்விழா கண்டோன்ஜூக்கில் உள்ள செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட 20 மொட்டையடித்த இராணுவ கவச உடையணிந்தவர்கள் பொலீஸ் நிலையத்திற்கு மிக அண்மையில் தமிழ் அகதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலை புதிய நாஜிக்களின் விருந்துபச்சார

பாசிச முசோலினி பாணியில் மொட்டையடித்து இராணுவ கவச உடையணிந்துள்ள புதிய நாஜி.



இப்போலீஸ் அதிகாரியின் தகவலை பொய்மையாக்கும் விதத்தில் சம்பவம் நடந்த மூன்று நாட்களுக்குப் பின்பு பொலீசாரால் 20 வயதுடைய "டேனியல் அபெர்ஹார்டு" என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் தாய்நாட்டு முன்னணியின் நிறைவேற்றக் குழு அங்கத்தவர் என்பது நிரூபணமாகியது. இவரின் வீட்டினை சோதனை செய்த பொலீசாரால் முன்னணியின் பல இனவெறி பிரச்சாரத் துண்டுப் பிரசுரங்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. பொலீசார் கைது செய்த ஆயுதங்களில் தோட்டா செய்யும் கருவியும் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யூலை மாதம் 2ந்தேதி 'சுர்' என்னும் இடத்தில் தமிழர் இருந்த வீடொன்றின் மீது தீ வைக்கப்பட்ட சம்பவம் அனைத்துத் தமிழ் அகதிகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இச்சம்பவத்தில் இரண்டு சிறுவர்கள் உட்பட நான்கு தமிழ் அகதிகள் இறந்துள்ளனர். இக்கோர சம்பவத்தினை புதிய நாஜிக்களே செய்தார்கள் என்பது இப்புதிய நாஜிக்கள் 'சுர்'இல் மேற்கொண்ட நடவடிக்கைகள் உறுதி செய்வதாக அமைகின்றது.

இச்சம்பவம் நிகழ்வதற்கு மூன்று வாரங்களிற்கு முன்பாக தமிழர் எதிர்ப்பியக்கம் என உரிமை கோரியும், சுவிட்சர்லாந்து சிலுவை பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் பரவலாக விநியோகிக்கப்பட்டு இருந்ததும் இதற்கு முன்னரே 'சுர்'இல் உள்ள இன்னோர் அகதி முகாமை தீயிட எடுத்த முயற்சி தோல்வியுற்றுள்ளதும் போன்ற சம்பவங்கள் இவ்வீட்டெரிப்பில் புதிய நாஜிக்கள் சம்பந்தம்

www.tamilarangam.net

பட்டதனை உறுதி செய்கின்றது. மேலும் இவ்வகையான தீவைப்பு முயற்சிகள் 'சுர்' இல் உள்ள இன்னொரு அகதி முகாம் மீது மூன்று முறை நடந்தது. இதுபோன்று 'பொர்ன்' இல் 'ஒஸ்டெர்முண்டிஜென்' என்ற இடத்திலும் தீவைப்பு முயற்சி நடந்தது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய நாஜிக்கள் இந்நாட்டில் வாழும் ஐரோப்பியர்களுக்கெதிராக செயற்படவில்லை. மாறாக வெளிநாட்டவர் என்ற போர்வையில் ஆசிய, லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க மக்களுக்கெதிராகவே கூடுதலான எதிர்ப்புணர்வை காட்டுகின்றனர். இவர்கள் வளர்வதற்கு ஐரோப்பிய அரசுகளும் காரணமாக அமைகின்றன. ஏனெனில் நாட்டில் ஏற்படும் முக்கிய நெருக்கடிகளுக்கு வெளிநாட்டவர்களே முக்கிய காரணம் என போலிக் காரணங்களைக் கூறித் தப்பித்துக் கொள்கின்றனர். இக்காரணங்களைப் புதிய நாஜிக்கள் இலகுவாகப் பயன்படுத்தி வருகின்றனர். (தற்போது தமிழ் அகதிகள் மீதான தாக்குதல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்றன) இவர்களுக்கு எதிரான பிரச்சாரங்களை இடதுசாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவர்களைவிட எண்ணிக்கையில் புதிய நாஜிக்கள் அதிகமாக உள்ளனர். பிரான்ஸ் நாட்டிலிருக்கும் 'தேசிய முன்னணி' எனும் புதிய நாஜிக்கள் குழு அங்குள்ள 'கம்யூனிஸ்டு' கட்சியைவிட 15% பலம் வாய்ந்ததாக உள்ளது. இவர்கள் வளர்ந்துவரும் போக்கில் தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப் படலாம்.

இந்நிலையில் ஐரோப்பிய தமிழ் அகதிகள் நிரந்தரமாக வாழலாம் என நினைப்பார்களாயின் அது கற்பனையாகவே அமையும். மேலும் இன்று ஐரோப்பாவில் பிறக்கும் தமிழ் குழந்தைகள் இந்நாடுகளிலேயே கல்வி கற்று, தொழில் வாய்ப்புகளில் ஈடுபடலாம் என்று எண்ணுகின்றனர். இவ்வெதிர்பார்ப்பு சாத்தியமற்றதொன்றாகும். இன்று ஐரோப்பிய நாடுகள் தாம் விரும்பாத வேலைகளையே வெளிநாட்டவர் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படுகின்றது. இதனால் நாம் அவர்களுடன் தொழில் ரீதியாக போட்டியில் நேரடியாக ஈடுபடவில்லை. மாறாக இங்கு வளர்ந்துவரும் தமிழ்க் குழந்தைகள் எதிர்காலத்தில் இந்நாட்டவர்களின் தொழில் வாய்ப்புகளுடன் போட்டி போடும் போது நாஜிகளின் நடவடிக்கை பன்மடங்காக அதிகரிக்கும். ஒரு நாட்டில் வாழும் சமூக அரசியல் உரிமையின்றி வாழ முடியாது. ஏனெனில் அச்சமூகம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் உரிமை முக்கியமானதாகும். சுவிட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் நீண்டகாலமாக வாழும் வெளிநாட்டவர்களுக்கு இன்றும் வாக்குரிமை கூட கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய தமிழ் அகதிகளாகிய நாம் இந்நாட்டில் பிரச்சினை உண்டாயின் இன்னோர் நாட்டிற்கு செல்லலாம் என்றால், அந்தந்த நாடுகளில் வெவ்வேறுவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவே நேரும். அவைகளைப் பார்க்கும் போது வெளிநாடுகளில் நிரந்தரமாக வாழ முடியாது என்பதை மேற்கூறிய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ◆

● நன்றி: **புதிய ஜனநாயகம்**

---

# பிரெஸ்ற்றின் ஒரு கவிதை

மகிழ்வும் பொசிப்பும் அற்றோரே!

உங்கள் சோதரன் நசுங்குதல் கண்டும்
கண்களை மூடிக்கொண்டீர்கள்! – அவன்
நசுங்கி அலறும் மரண ஒலியிலும்
மௌனம் காத்தீர்கள்!

நசுக்கிய 'திமிரோன்' ஊருலா வருகிறான்
மீண்டும் நசுக்கிட ஆட்தேடி.

நீங்கள் சொல்வதோ;
அவனை எதிர்க்காதிருக்கும் வரையிலும்
எங்களை நசுக்காதிருப்பான் என்பதே!

நீங்கள் என்னதான் மக்கள்
என்ன தான் நாடு

உரிமைகள் இங்கே நசுக்கப்பட்டால்
'பிரளயம்' இங்கே நடந்திடவேண்டும்
பிரளயம் இங்கே எழுந்திடாவிட்டால்
இருட்டு முன்பாக இந்நகர் தீயில்
எரிந்து கருகுதல் நன்றிலும் நன்று!

● தமிழில்: இரா. ரஜீன்குமார் (பேர்லின்)

நன்றி: ஆறுவது இலக்கியச் சந்திப்பு அறிமுகத் தொகுப்பு

www.tamilarangam.net

# அமெரிக்காவின் இன்னொரு அத்துமீறல்

எஸ். அரவிந்தன்



இவ்வாண்டு ஜனவரி முதல் கியூபா எதிர்ப்புப் பிரசாரத்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒளிபரப்ப அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது. கியூபாவை மையப்படுத்தி ஒளிபரப்பாகும் இந் நிகழ்ச்சிகளை செய்மதியூடாக அனுப்ப அமெரிக்கா முனைந்துவருகிறது.

இச் செயல் மூலம் கியூபா மக்களுடைய சுதந்திரம், இறைமை, பிரதேச சுயாதிபத்திய உரிமையை மீறும் வகையில் அமெரிக்கா பலாத்கார நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இச் செயல் கியூபாமீது அமெரிக்காவின் கலாசார ஆக்கிரமிப்பே எனப் பல அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கியூபா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு 1960 காலப்பகுதியில் இருந்து தொடர்ந்து வருகிறது. அக்காலப் பகுதியில் கியூபாவை இலக்காகக் கொண்டு சுவாம் தீவில் அமெரிக்கப் புலனாய்வுத் திணைக்களமான சி.ஐ.ஏ வானொலி நிலையம் ஒன்றை நிறுவியது. வொய்ஸ் ஒவ் அமெரிக்காவுடனும் ஏனைய வர்த்தக வானொலி நிறுவனங்களுடனும் இணைந்து நடத்தப்பட்ட இவ் வானொலி அமைப்பு கியூபா அரசை நலினப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவந்தது. 1961ல் பிக்குடாவில் தனது ஆக்கிரமிப்பை அமெரிக்கா மேற்கொண்டபோது இந்த வானொலி நிலையம் கியூபா எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டது. இவ்வாறே 1962ல் ஏவுகணை நெருக்கடியின் போதும் புளோரிடாவில் உள்ள வானொலி கியூபாவுக்கு எதிராகச் செயற்பட்டது. பிக்குடா ஆக்கிரமிப்பின் பின்னர் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி தனது எதிர்ப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தியதுடன் சுவாம் தீவில் உள்ள வானொலி நிலையம் அமெரிக்க வானொலி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1982ல் நைரோபியில் சர்வதேச தகவல் தொலைத் தொடர்புப் பிரகடனத்தில் கியூபா உட்பட 130 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்காவின் இச் செயல் கியூபா மீதான நேரடி ஆக்கிரமிப்பே.

ஏகாதிபத்தியங்களின் இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உலக மக்கள் ஒன்று திரண்டு கண்டிக்கவேண்டும். இதன்மூலம் கியூபா மக்களின் இறைமையை மட்டுமல்ல, எந்தவொரு தேசிய இனத்தினதும் இறைமையை ஏகாதிபத்தியங்கள் சீண்ட முடியாதவாறு பாடம் கற்பிக்க முடியும்.

# செய்திச் சிதறல்கள்

ஒக்ரோபர் 1-7

* வவுனியாவில் கடத்தப்பட்ட ரெலோ உறுப்பினர் இருவரும் தீங்கின்றி விடுவிக்கப்படாவிடில் தாம் தீவிர நடவடிக்கை எடுக்கவிருப்பதாக ரெலோ வன்னிப் பொறுப்பாளர் ஞானி பத்திரிகை அறிக்கையில் தெரிவித்தார்.
* இரத்தத்தில் குதிப்பதை நிறுத்துங்கள்! அமைதியே இன்றைய தேவை! கல்விக்கு இடையூறு செய்யாதீர்! என்ற கோசங்களுடன் கன்னுகத்தில் மாணவ, மாணவியர் அமைதி ஊர்வலம்.
* ஜே.வி.பியும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி பிரேமதாசா மாத்தறையில் அழைப்பு விடுத்தார்.
* முப்படைகளில் தமிழ் பேசும் 21,550 பேரைச் சேர்க்க பாதுகாப்பு அமைச்ச முடிவு செய்துள்ளதாய் வட- கிழக்கு முதல்வர் அறிவித்தார்.
* அம்பாறை மாவட்ட திருக்கோவில் பகுதியில் தம்பட்டை ...
* இலங்கையில் போக்குவரத்துக் கட்டணங்கள் 30% உயர்ந்தன.
* வடக்கு கிழக்கு பகுதியில் தமது அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்து தடுக்கப்பட்டால் பாராளுமன்ற ஜனநாயகப் பாதையிலிருந்து விலக நேரிடும் என ஈரோஸ் தலைவர் பாலகுமார் கூறியுள்ளார்.
* ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீராவும், முன்னணியின் முக்கிய உறுப்பினர் எச்.பி. ஹேரத்தும் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மறுதினம் பொதுச் செயலாளர் கமநாயகாவும் கொல்லப்பட்டார்.
* கல்முனையில் துப்பாக்கி நபர்களினால் கடத்தப்பட்ட ஆசிரியர்களை விடுவிக்குமாறு மாணவர், நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நவம்பர் 16-23

* அரச ஊழியர்க்கு ஜனவரி முதல் ...

* கேகாலை மாவட்டத்தில் 200க்கு மேற்பட்ட தபாலகங்கள் தீயிடப்பட்டன.
* கல்முனை பாண்டிருப்பு பகுதிகளில் தொடர்ந்தும் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இதுவரை 20ஆயிரம் பேர் அகதிகள் ஆகியுள்ளனர்.
* இந்தியத் தேர்தலில் யார் வென்றாலும் அதன் வெளிநாட்டுக் கொள்கை மாறும் என நம்பிச் செயற்படக்கூடாது என முஸ்லிம் காங்கிரஸ் பா.உ ஹிஸ்புல்லா பாராளுமன்றத்தில் கூறினர்.
* ரெலோ பா.உ திவ்வியநாதன் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்படுவார் என இயக்கத் தலைமைப் பீட உறுப்பினர் சிவாஜிலிங்கம் அறிவித்தார்.
* திக்வெலையில் ராணுவமுகாம், பொலிஸ் நிலையங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல், 4 தீவிரவாதிகள் பலியானதாகவும் பல கட்டிடங்கள் பாதிக்கப்பட்டதாகவும் அரச அறிக்கை.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிராமங்களில் இரு இயக்கங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து பதற்றநிலை உருவானது. 42பேர் இச்சம்பவத்தில் பலியானதாகவும் 50பேர் காயமடைந்ததாவும் தெரியவருகிறது.

* இன்னொரு தொகுதி இந்தியப் படை திருமலை வழியே திரும்பியது.

ஒக்ரோபர் 8-15

* இலங்கை வரவு செலவுத் திட்டத்தில் ரூபா4204 கோடி துண்டுவிழுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.
* அம்பாறை சம்பவங்கள் தொடர்பாக அமைச்சர் ரஞ்சன் தந்த உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை என முதல்வர் பெருமாள் கூறியுள்ளார்.
* அம்பாறை சம்பவங்கள் தொடர்பாக அமைச்சர் ரஞ்சனுடன் ஈரோஸ் பாலகுமார் சந்திப்பு நிகழ்த்தினார்.
* இலங்கை அரசு விடுதலைப் புலிகளை சமாதான வழிக்குக் கொண்டு வரவேண்டும், இல்லையேல் சட்டம் ஒழுங்கைப் பேண அரசு மாகாண அரசுக்கு உதவவேண்டும் என யாழ். பா. உ பிரேமச்சந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.
* அமைதிப் படை விலகலில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் வட கிழக்கில் இயங்கும் சட்டவிரோத ராணுவப் பிரிவுகள் தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல பத்திரிகையாளரிடம் கூறினர்.

கடிதங்கள் 25சதத்தாலும், வெளிநாட்டுக் கடிதங்கள் 2-5 ரூபாயாலும் கட்டண அதிகரிப்பு, சர்வதேசக் கடவுச் சீட்டுக்கு மீளப் பெற முடியாத 1000ரூபா பிணைப்பணம் (பிணை உறுதிக்குப் பதிலாக), ஆடம்பர மின்சாரப் பாவனைப் பொருட்களுக்கு 40% வரி உயர்வு என அரசு அறிவிப்பு.

* ஜே.வி.பிக்கு உதவியோருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுது தடுக்கப்படுவர் எனவும் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு.
* அம்பாறை மாவட்டத்தில் 4 பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. 13பொலிசார், 4ராணுவத்தினர் பலி.
* கைதாகி முகாமிலிருக்கும் ஆயிரம் விடுதலைப் புலிகளை இலங்கை அரசிடம் இந்தியா ஒப்படைக்கும் என அறிவிப்பு.
* சீனக்குடா கண்ணிவெடியில் 9 இந்தியப் படையினர் பலி
* நிரந்தர அமைதிக்கு இயக்கங்கள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என சித்தார்த்தன் (புளொட்) கருத்து வெளியிட்டார்.

நவம்பர் 24-30

* அம்பாறை வன்செயல்களால் இடம்பெயர்ந்தோர் உணவு, சுகாதார வசதிகளின்றி முகாம்களில் அவதியுறுகின்றனர்.
* இலங்கை இந்திய அரசுகள் பனிப்போர் நடத்துவதில் நம் இனம் பலியாகிறது என மாவை சேனாதிராஜா(பா.உ, கூட்டணி) கூறியுள்ளார்.

சங்களைக் குடும்பங்கள் கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

டிசம்பர் 1-7

* இலங்கையிலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அடுத்த வருடம் முதல் அமுல் நடத்தவிருப்பதாக அமைச்சர் தேவராஜ் அறிவித்துள்ளார்.
* இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த மும்மொழிப் போதனையை சகல பாடசாலைகளிலும் கட்டாயமாக்க அரசு தீர்மானித்துள்ளது.
* அம்பாறை மாவட்டம் இலங்கைப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும், தமிழ் தேசிய ராணுவத்தைத் தாக்கவேண்டாமெனத் தாம் விடுதலைப் புலிகளைக் கேட்டிருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண அறிவித்துள்ளார்.
* காத்தான்குடிவரை இலங்கைப் பொலிசாரும், அதிரடிப்படைப் பிரிவினரும் கனரக வாகனங்கள் சகிதம் ஊர்வலம் சென்றனர்.
* அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத் தாக்குதலின்பின் 102 ரிசேவ் பொலிசார் கடமை துறந்துள்ளனர்.
* கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உள்ள 49 தமிழ்க் கைதிகள் அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் அனுப்பிவைக்குமாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு கடிதம் எழுதியுள்ளனர்.
* இந்தியப் படை விலகியபின், இலங்கை ராணுவம் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்படமுன் உரியவர்களுடன் பேச்சு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தி தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை அரசியல் ரீதியாகத் தீர்த்துவைக்க வேண்டும் என ஈரோஸ் பா.உ பரா பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

* மன்னாரிலிருந்து இந்தியப் படையினர் விலகத் தொடங்கினர்.
* அம்பாறையில் தென்னிலங்கைத் தீவிரவாதிகளுக்கு புனர்வாழ்வு முகாம் அமைக்கும் எண்ணத்தை அரசு கைவிடவேண்டும் என சாம் தம்பிமுத்து (பா.உ) கூறியுள்ளார்.
* ராஜாங்க அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா சகல தமிழ் அமைப்பின் தலைவர்களையும் கூட்டுமுகமாக மாநாடு ஒன்றைக் கூட்டியுள்ளார்.
* நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் தமிழ் அகதிகள் ராமேஸ்வரம் சென்றுள்ளனர்.
* மட்டக்களப்புப் பகுதியில் இயக்க மோதலில் 11பேர் பலியாகினர்.
* பிற்போடப்பட்ட சார்க் மாநாட்டை மார்ச் 8ம்திகதி நடத்த இலங்கை உறுதி அளித்துள்ளது.
* இயக்கத் தலைவர்களின் மாநாட்டில் தமிழ் தேசிய சபையில் இடம்பெறும் அமைப்புகள் பங்குபற்ற என அறிவிக்கப்பட்டுள்ளது.
* யாழ்நகரில் ஆயுதக் குழுக்களால் நகைக் கடைகள் கொள்ளையிடப்பட்டதை அடுத்து எல்லா நகைக்கடைகளும் பூட்டப்பட்டன.
* தெற்கில் வன்செயல்கள் திடீரென அதிகரித்தன. ஒரே இரவில் 53பஸ்கள் எரிக்கப்பட்டன. அம்பாந்தோட்டை
* இந்தியப் படை வெளியேறி வருவதால், தமிழ்க் குழுக்களிடையே புரிந்துணர்வுடன் செயல்படும் சூழலை உருவாக்கி மாகாணசபைகளுக்கு அதிக அதிகாரம் வழங்கத் தான் முயன்று வருவதாக ஜனாதிபதி ஐ.தே.க நிர்வாகக் கூட்டத்தில் கூறினர்.
* மூதூர்ப் பகுதியில் மூடப்பட்ட இந்திய ராணுவ முகாம்கள் மீண்டும் அதிக படையினருடன் திறந்தன.
* மட்டக்களப்பு பா.உ சாம் தம்பிமுத்துவின் மகனும், மனைவியும் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
* சிறுபான்மையிருக்கு கூடுதல் உரிமைகள் வழங்காவிட்டால் நாடு பிளவுபடுதலைத் தவிர்க்க முடியாது என ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.
* வடபகுதியில் அரிசி விலை பெருமளவு உயர்ந்தது. அப்பியாசக் கொப்பிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.
* ஜனநாயக அரசியலில் தாம் ஈடுபடுவதால்

இனி தேர்தல்களிலும் போட்டியிடவிருப்பதாகவும் ஏனைய குழுக்களுக்குத் தாம் குந்தகமாய் இருக்கமாட்டோம் எனவும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியாக 'விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி' இருக்கும். தலைவராக மாத்தயாவும், செயலாளராக யோகியும் இருப்பர். கட்சியின் சின்னம் புலியாக இருக்கும்.

* யாழ், திருமலையிலிருந்து இந்தியப் படை வெளியேறத் தயங்குவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறியுள்ளார்.

<u>டிசம்பர் 23-31</u>

* அம்பாந்தோட்டைப் பகுதியில் நடந்த வன்முறைகளில் 200 பேர்வரை கொல்லப்பட்டனர்.
* அக்கரைப்பற்றுப் பகுதியில் அமைதிக்கு திரும்பியதைத் தொடர்ந்தும், இலங்கை ராணுவத்தின் வருகையாலும் அங்கிருந்து இடம் பெயர்ந்திருந்த சிங்கள மக்கள் மீண்டும் அப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.
* தமது உறுப்பினர்கள் மலையகத்தில் கைது செய்யப்படுவதாய் ஈழவர் முன்னணி ஆட்சேபம் தெரிவித்துள்ளது.
* இந்தியப் படை விலகல் எப்போது முற்றுறும் என்ற தகவல் தனக்கில்லை என ரஞ்சன் விஜேரத்ன கூறியுள்ளார்.
* வவுனியா- மன்னார் வீதியில் நெலுக்குளம் என்ற இடத்தில் இடம்பெற்ற இயக்க மோதலின்போது 31பேர் பலியாகினர்.
* வன்னி, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து இந்தியப் படை முற்றாக விலகியது.
* அம்பாந்தோட்டையில் 31 எரிந்த சடலங்கள் கிடந்தன.
* மார்ச் இறுதியில் இந்தியப் படை முற்றாக விலகும் என இந்தியா அறிவித்தது.
* யாழ். பல்கலைக்கழகத்தின் புனரமைப்புக்கு ரூபா 22கோடி செலவிடப்படவுள்ளது. இதில் 20கோடியை பிரிட்டனும், 2கோடியை இலங்கை அரசும் செலவிடும்.

நிகழ்ந்தன.

* டில்லி பேச்சு வார்த்தைகளின்பின் கருணாநிதி இலங்கைப் பிரச்சனைக்குப் புதிய திட்டம் ஒன்று தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
* திருமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் மகிந்தபுரம் என்ற பெயரில் புதிய சிங்களக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்படுவதாக ஈ.என்.டி.எல்.எவ் குற்றம் சாட்டியுள்ளது.
* இந்தியப் படைகள் விலகக்கூடாது எனக் கோரித் திருமலையில் ஊர்வலம் நடத்தப்பட்டது.
* விடுதலைப் புலிகள் கருணாநிதியைச் சந்திக்க சென்னை சென்றனர். செல்லுமுன் ஜனாதிபதியையும் சந்தித்தனர்.
* மட்டக்களப்பு மோதலில் 52பேர் பலியாயினர்.
* 'இந்தியாவில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் இந்திய நலன்களே அவர்களுக்கு முக்கியம் என்பதை உணரவேண்டும்' என அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.
* தலைமன்னார் கடற்படை முகாம் மீதான தாக்குதலின் போது காயமடைந்த 8 ரெலோ போராளிகள் இராமேஸ்வர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டிசெம்பர் 16-22

* முரண்பாடுகளைக் களைந்தெறிந்து தமிழர்களின் நலன்கான அனைத்து இயக்கங்களும் ஒன்றுபடும்படி தமிழ்பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

* தென்னாபிரிக்காவில் வெள்ளை இனப் பொலிசாரின் அட்டூழியம் பற்றி அந்நாட்டுப் பொலிஸ் அதிகாரியான லெப்ரினன்ட் கிரகரி ரொக்மன் எழுதிய புத்தகத்தை பிரசுரிக்காமல் நிறுத்தும்படி அந்நாட்டுப் பொலிஸ் உத்தரவிட்டுள்ளது.
* கிழக்கு ஜேர்மனியின் ஜனநாயக உரிமை கோரும் மக்களின் அபிலாசைகளை திருப்தி செய்யத் தவறிய முன்னாள் அதிபர் ஹொனேக்கர் உட்படப் பல அரசியல் உயரதிகாரிகள் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.
* அமெரிக்கத் தேர்தல்களில் கறுப்பர்கள் கவர்ணராகவும் மேயராகவும் வெற்றிபெற்று அரசியல் சரித்திரம் படைத்துள்ளனர்.
* நான்கு நாட்களாக எல்சல்வடோரில் படைகளுக்கும் இடதுசாரி கெரில்லாக்களுக்கும் நடந்த சண்டையில் 650க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 1000பேருக்குமேல் காயமுற்றுள்ளனர்.
* லெபனானின் புதிய ஜனாதிபதி ரேனே முஹாமட் கார்க்குண்டுவிபத்தில் கொல்லப்பட்டார்.
* பிலிப்பைன்ஸ் ஆயுதப் படையின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி அக்கினோவுக்கு எதிராக மேற்கொண்ட திடீர்ப் புரட்சி அமெரிக்க இராணுவ உதவியுடன் சிலநாட்களின்பின் முறியடிக்கப்பட்டது.
* இந்தியத் தேர்தலில் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி பாரதீய ஜனதாக் கட்சி உதவியுடன் ஆட்சியமைத்தது.
* ஜனவரிமுதல் கியூபா எதிர்ப்பு நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் ஒலிபரப்ப அமெரிக்க நிரிவாகம் திட்டமிட்டுள்ளது.
* பனாமா அதிபர் நொறியேகா அமெரிக்காவின் படையெடுப்பால் வத்திக்கான் தூதரகத்தில் தஞ்சமடைந்து பின்னர் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.
* ருமேனியாவில் ஜனநாயக உரிமைகள்கோரி மக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்கள் அரச படையால் ஒடுக்கப்பட்ட போது 4000பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். ஜனாதிபதி சியஸ்கோவும் அவரது மனைவியும் இராணுவத்தின் ஒருபிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவரது ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 60,000 பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என சில செய்திகள் தெரிவிக்கின்றன.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழத்துக் கலை, இலக்கியங்களி தென்மோடி, வடமோடி நாட்டுக்கூத்துக பாரம்பரியமானவை.

ஈழத்தின் வடபகுதிமக்களா பேணப்பட்டுவந்த தென்மோ நாட்டுக்கூத்து, பாடல்களையு நடிப்புகளையும் முக்கியமாகக் கொண்டது ஆனால் வடமோடி தாளலயங்களையு பாடல்களையும் முக்கியமாகக்கொண்டது.

இன்று இவை அழிந்துபோகு நிலையேற்பட்டாலும்கூட போராட் சூழ்நிலைகளா புதியபரிணாமத்தைப்பெற்றும், பரிசோதனை முயற்சிகளாகவும்வடமோடி தன் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டாலும் தென்மோடி நாட்டுக்கூத்து அழிந்துபோகும் நிலையிலேயே போய்க்கொண்டிருக்கிறது. இந்நிலை நீடிப்பது வேதனைக்குரிய விடம்.

வடபகுதியில் தென்மோடி நாட்டுக்கூத்து ஆலவிருட்சமாய் வளர்வதற்குக் காரணமாய் இருந்தவர்களில் மறைந்த நீ.வ.அந்தோனி முக்கியமானவர் என்பது மறுக்கமுடியாததும் தென்மோடியின் வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியதுமாகும். தீவுப்பகுதியில் கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தீவுப்பகுதிகளில் மட்டுமல்லாது அப்பகுதிகளுக்கு வெளியேயுள்ள கரையோரப் பகுதிகளிலும் தென்மோடி நாட்டுக்கூத்து பரவலாக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்திருக்கிறார். நாட்டுக்கூத்தை எழுதி இயக்கிய சிலரில் இவரும் ஒருவராவார்.

- நாடோடி -

## மேலெழுந்து வரும் மறைந்துபோன பக்கங்கள்

www.tamilarangam.net

நீ.வ.அந்தோனிமுத்துவின் பாடல்களின் கவித்துவம் ஏனைய நாட்டுக்கூத்துக் கவிஞர்களைவிட மாறுபட்டதும் ஆழுமைமிக்க புலமையுங் உடையது என்பது மறுக்கமுடியாதது.

ஆரம்பகாலங்களில் நாட்டுக்கூத்துகளில் மதசார்புடைய கதைகளையே எழுதிப் பாடிவந்தனர்.

தென்மோடி நாட்டுக்கூத்தில் சமூகக்கதைகளையும் திரைப்படங்களையும் கவிபுனைந்து இயக்கியதில் முதன்மையான இடத்தைப் பிடித்தவர் நீ.வ.

டிசோன் பாலந்தை, ஆனந்தசீலன், நாய் நாடகம் போன்ற நாட்டுக்கூத்துகள் இவரால் எழுதி இயக்கப்பட்ட புகழ்பெற்ற நாட்டுக்கூத்துகள். **M.G.R.** அவர்கள் நடித்த ராஜகுமாரி திரைப்படத்தை கவிதையில் எழுதி நாட்டுக்கூத்தாக இயக்கி வெற்றியும் கண்டார்.

இவரால் எழுதி இயக்கப்பட்ட கிறிஸ்தோபர் நாட்டுக்கூத்துக்கு கலையரசு சொர்ணலிங்கத்தால் 'கலைக்குரிசில்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

அறியப்படாது புரட்டப்பட்ட அத்தியாயங்களில் இவரது உழைப்பும் இடம்பெற்றுவிட்டது வேதனைக்குரியது. இந்நிலை தொடர்ந்தும் நீடிப்பது விரும்பத்தக்கதல்ல.

மறைவிலிருக்கும் கவிஞர்கள், கலைஞர்கள் ஊக்கங்கொடுத்து வெளிக்கொணரப்படவேண்டும்.

எமது மண்ணின் பாரம்பரிய கலை, இலக்கியங்கள் அழிந்துபோவதை எம்மால் என்றுமே அனுமதிக்கவியலாது. குறைந்தபட்சம் அவை தொடர்பான ஆவணங்களை பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையினரின் கைகளில் ஒப்படைக்கவேண்டியது எம்முன்னுள்ள பணியாகும்.●

நண்பா சொல்க.
துரோகத்தின் அளவுகோல் என்ன?

முன்பெல்லாம் கைகள் கோர்த்து,
கால்கள் செம்மண் அளைந்துவர,
தவறுகள் சுட்டின் மகிழ்ந்து,
உண்மை பாதுகாக்கப்படுகிறதென்பாய்
விமர்சனம் காணின்,
புரட்சிக்கான திறவுகோலென குதூகலிப்பாய்.

கண்மூடித்திறக்க ஆடிப்புழுதியில்,
எங்ஙனம் கெட்டன கண்கள்?

இப்போது என்ன?
நான் தவறுகள் சுட்டிக் காட்டின்,
மூளை பிதகளித்தவன் என்கிறாய்
விமர்சனம் வைக்கக்கண்டால்
காட்டிகொடுப்பவன் என முகம்சுழிக்கிறாய்
தவறுகள் கண்டிக்கக் காணின்
துரோகி என உரத்து சத்தமிடுகிறாய்...
நண்பா சொல்க
துரோகத்தின் அளவுகோல் என்ன?

பொருளும் தராசும் மாறாதிருக்க,
அளவுகள் மட்டும் எங்ஙனம் மாறுதல்காணும்?.
புரிந்தது நன்கு!
உனது தராசுப்படிகள் தான்
தேய்ந்து போயின என்று.
நண்பா இப்போதாயினும் சொல்க
துரோகத்தின் அளவு கோல் என்ன?...

சின்னா.

www.tamilarangam.net



# இசைக் கோலம்

சில கர்நாடக இசை வல்லுநர்களின் கர்நாடக இசைப் பார்வையில் மெல்லிசைப் பாடலென்பது ஒரு கணக்கில் எடுபடாத, அல்லது இதுவும் பாடுவதற்கு உகந்ததா? என்ற ஒரு கருத்து இன்னமும் இருந்து வருகிறது. ஏனெனில் மெல்லிசைப் பாடல்களில் பெரும்பான்மையானவை சினிமா மூலமே வெளிவருகின்றன. சினிமாவைத் தரம் குறைவானது என்று எண்ணியோ என்னவோ அதில் வரும் மெல்லிசைப் பாடல்களையும் தரம் குறைத்துக்(!) கணித்து விடுகிறுர்கள்.

மெல்லிசைப் பாடல்கள் எங்கிருந்து தோன்றின என்று சிந்தித்திருந்தால், அல்லது இது ஏன் உருவாக்கப்பட்டது என்று எண்ணியிருந்தால் இந்தப் பிரச்சனைக்கே இடமில்லை. இந்த மெல்லிசைப் பாடல் என்பது கர்நாடக இசையின் ஒரு பிள்ளை என்பதே உண்மை.

கர்நாடக சங்கீதக் கச்சேரி கேட்க வேண்டும் என்ருல்- ரசிக்க வேண்டும் என்ருல் நிச்சயம் அவர் சங்கீதம் படித்திருக்க வேண்டும்; அல்லது அதை ரசிப்பதற்கான தன்மை புரிந்திருக்க வேண்டும். உதாரணத்துக்கு எமது நாட்டில் நடந்த சில இந்தியக் கர்நாடக மேதைகளின் நிகழ்ச்சிகளைப் பார்த்தோமெனில், அவர்களின் அந்தக் கர்நாடக இசையை ரசித்தவர்கள் அங்கிருந்த ஜனத்திரளின் 10%இற்கும் குறைவாகவே இருந்திருக்கின்றனர். மாருக மிகுதிப் பேர் அவர்களின் மெல்லிசைப் பாடல்களையோ, பக்திப் பாடல்களையோ தான் கேட்கச் சென்றிருப்பர்.

அதைவிட இங்கு (நோர்வேயில்) பிரபல அகில இந்தியப் பாடகி திருமதி. வாணி ஜெயராம் அவர்கள் வந்து நிகழ்ச்சி வழங்கியது ஒரு சிலருக்கே தெரிந்திருந்தது. காரணம் அவர்கள் கர்நாடக ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளை நடாத்த வந்திருந்தமையே. இருந்தும் பார்த்தவர்களில் பலரும் அவர் பாடிய மெல்லிசைப் பாடலையே புகழ்ந்து கூறினர்.

இவற்றை எடுத்து ஆராயுமிடத்து மெல்லிசைப் பாடலென்பது கர்நாடக இசையிலிருந்து சற்று மென்மையாகி, யாவருக்கும் சென்றடையக் கூடிய, கிரகிக்கக் கூடிய வகையில் அதன் இசை வடிவம் (மெலோடி) அமைந்திருப்பது தான் அதன் எழுச்சிக்குக் காரணம். சாதாரணமாக சங்கீதமென்ருல் என்னவென்று புரியாதவனும் பாடக்கூடிய எளிமை இதிலுண்டு.

இதில் இசை வடிவத்தில்தான் மாற்றமேயன்றி மற்றபடி பக்தி, எழுச்சி, காதல், ஏக்கம் போன்ற பலதரப்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் அது கர்நாடக சங்கீதத்தை ஒத்தே காணப்படுகின்றது.


மெல்லிசைப் பாடல்களில் இவ்வுணர்ச்சிகள் துல்லியமாக விளங்குவதற்குக் காரணம் இங்கு உச்சரிப்புக்கு முக்கியத்துவம் உண்டு. ஆனல் இதே உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கர்நாடக இசையில் உச்சரிப்பைவிட இசைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் அதனை உணரும் தன்மை; ரசிக்கும் தன்மையை ஒருசிலர் இழந்து விடுகின்றனர்.

– கே.சுந்தர் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமைச்சரவை நீடிக்குமா?

நோர்வே நாட்டின் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று நான்கு மாதங்கள் கடந்து விட்டன. வலதுசாரிக் கட்சிகள் சேர்ந்து அமைத்த கூட்டணி அரசு தற்போது நாட்டை நிர்வகித்து வருகின்றது. நடந்து முடிந்த தேர்தலில் எதிர்பார்த்ததை விட மக்கள் பெருமளவிற்கு வாக்களிப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 82% மக்கள் இத்தேர்தலில் பங்கு பற்றியுள்ளனர்.

இதுவரை 157 அங்கத்தவர்களைக் கொண்டு இயங்கிவந்த நாடாளுமன்றமானது, நடைபெற்ற தேர்தலின் பின் 165 அங்கத்தவர்களைக் கொண்டதாக இயங்குகின்றது. இந்நாட்டின் இரு பெரும் கட்சிகளான வலதுசாரிக் கட்சியும், தொழிற் கட்சியும் முன்பிருந்ததைவிட தற்போது குறைவான பிரதிநிதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற போதும் தொழிற் கட்சியை விட(Ar.p), வலதுசாரிக் கட்சியின்(Høyre) வீழ்ச்சியே அதிகமாக இருந்தது. இத்துடன் கிறிஸ்தவ மக்கள் கட்சி(KrF), இரு இடங்களையும், மத்திய கட்சி ஒரு இடத்தையும் இழந்துள்ளது.

மறுபுறம் பலரும் எதிர் பார்த்ததைப் போல் தீவிர வலதுசாரிக் கட்சியான சீர்திருத்தக்கட்சி(Fr.P) வெற்றியை ஈட்டியதுடன், அரசாங்கத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. 1985 தேர்தலில் இரு அங்கத்தவர்களை மட்டுமே கொண்டிருந்த கட்சியானது கடந்த தேர்தலின் போது இருபத்திரண்டு அங்கத்தவர்களை பாராளுமன்றத்தில் பெற்றுள்ளது. நாட்டின் சகல பகுதிகளிலும் இக் கட்சியானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. கட்சியின் தலைவர் கார்ள்.இ.ஹாகனின் சிறந்த பேச்சாற்றலும், நாட்டில் நிலவிய பொருளாதார மந்த நிலைமையும், வலதுசாரிக் கட்சியின் அரசியற் செயற்பாட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியும், இவை யாவற்றுடனும் இக்கட்சியின் வெளிநாட்டார் தொடர்பான கொள்கையுமே கட்சிக்கு குறிப்பிடத்தக்க அளவு வெற்றியைத் தேடித் தந்துள்ளது. நடைபெற்ற தேர்தலில் கட்சி ரீதியாக நோக்கும் போது இக்கட்சியே பெரும் வெற்றி பெற்றுள்ளது.

அதேசமயம் தேர்தலில் அதிர்ச்சியளித்த விடயம் சோசலிச இடதுசாரிக் கட்சியின்(S.V) துரித வளர்ச்சியாகும். பத்திரிகைகளின் கணிப்பீட்டை எல்லாம் மீறி எதிர் பார்த்ததை விட அதிகமான இடங்களில் வெற்றியீட்டியுள்ளது. நாட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடமுனையில், சோவியத்தின் எல்லையில் அமைந்துள்ள 'பின்மார்க்' மாவட்டத்தில் இக்கட்சி பெற்ற பெருவெற்றியானது, நாட்டின் வடமுனையில் "குட்டி சோவியத் உருவாகின்றது" என பத்திரிகைகள் எழுதும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. 1985 தேர்தலில் இம்மாவட்டம் தொழிற்கட்சியின் கோட்டையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1985 தேர்தலில் ஆறு பிரதிநிதிகளை மாத்திரமே பாராளு மன்றத்தில் கொண்டிருந்த இக்கட்சியானது தற்போது 17 பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. சராசரி இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் இக்கட்சி பெற்றுவரும் செல்வாக்கானது இக்கட்சிக்கு பிரகாசமான எதிர்காலம் இருப்பதாக குறிப்பிடுகின்றது.

இத்தேர்தல் முடிவுகளை நோக்கும் போது கட்சிகளின் வாக்குகள் பிரிக்கப்பட்டு இருப்பினும் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட முறையில் பெருமளவு மாற்றம் காணப்படவில்லை எனத்தெரிகின்றது. குறிப்பாக வலதுசாரிக்கட்சி, கிறிஸ்தவ மக்கள் கட்சி, மத்தியகட்சி ஆகியவற்றின் வாக்குகள் பிரிக்கப்பட்டு அவை சீர்திருத்தக் கட்சிக்கும், தொழிற்கட்சியின் வாக்குகள் பிரிக்கப்பட்டு அவை சோசலிச இடதுசாரிக் கட்சிக்கும் வாக்களிக்கப்பட்டுள்ளன. தற்போது நாடாளுமன்றத்தில் கட்சிகளின் நிலை பின்வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| தொழிற் கட்சி | 63 |
| வலதுசாரிக் கட்சி | 37 |
| கிறிஸ்தவ மக்கள்கட்சி | 14 |
| மத்திய கட்சி | 11 |
| சீர்திருத்தக் கட்சி | 22 |
| சோசலிச இடதுசாரி.க. | 17 |
| சாமிஸ்க் தேசியகட்சி | 01 |
| | 165 |

இந்நாட்டில் வசிக்கும் மிகவும் குறைந்த எண்ணிக்கையுடைய சிறுபான்மை மக்களாகிய 'சாமிஸ்க்' மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடியதாக இந்நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக சாமிஸ்க் தேசியகட்சி பாராளுமன்றத்தில் ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. இம்மக்கள் பெருமளவில் வசிக்கும் வடமுனையில் இருக்கும் 'பின்மார்க்' மாவட்டத்திலிருந்தே இப்பிரதிநிதி தெரிவு செய்யப் பட்டுள்ளார். இதுவரை தொழிற்கட்சியுடன் இணைந்தே செயற்பட்டு வந்த இக்கட்சி நடைபெற்ற தேர்தலில் தனித்து இயங்கியது. தேர்தல் நடைபெற்ற கையுடனேயே சாமிஸ்க் மக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு என ஒரு தலைவரையும் (ஜனாதிபதியைப் போல்) தமது நிர்வாகத்தை தாமே நடத்தக் கூடியதாக 'ஒரு குட்டி ஆட்சி சபையும்' (பாராளு மன்றத்தைப் போல்) அமைக்கப்பட்டு அம்மக்கள் சுதந்திரமாக இயங்க வழிவகுக்கப் பட்டுள்ளது. பலத்த போராட்டத்தின் பின்னும்கூட சிறுபான்மை மக்களுக்கு முறையான அதிகார பரவலாக்கல் வழங்கப்படாது இழுத்தடிக்கும் பல நாடுகளின் மத்தியில் சாமிஸ்க் மக்கள் கேட்காமலேயே அதிகாரத்தை பரவலாக்கியுள்ள இச் செயற்பாடானது ஏனைய நாடுகளிற்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது!

தேர்தல் முடிவுகளானது மக்களை மட்டுமன்றி அரசியல்வாதிகளையும் பெரும் குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. காரணம் பாராளுமன்றத்தில் எக்கட்சியோ, அன்றேல் எந்தக் கூட்டணியோ, அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாமல் போய்விட்டது. எனினும் எண்ணிக்கையின் அடிப்படையில் தொழிற் கட்சி, சோசலிச

www.tamilarangam.net

இடதுசாரிக் கட்சிகளின் அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்தில் அதிகளவு இடங்களைக் கொண்டிருந்தமையால் தொழிற்கட்சி அமைச்சரவை தொடரக் கூடிய வாய்ப்புகள் இருந்தது. ஆனுல் கடைசி நேரத்தில் வலது சாரிக்கட்சி, கிறிஸ்தவ மக்கள் கட்சி, மத்திய கட்சி ஆகியவற்றிற்கிடையில் ஒருமித்த கருத்து ஏற்பட்டமையாலும், சீர்திருத்தக் கட்சியானது தொழிற் கட்சியின் ஆட்சியை கலைப்பதில் உறுதியாக நின்றமையாலும் வலது சாரி அரசாங்கம் பதவியேற்கும் நிலை உருவாகியது. பாராளுமன்றத்தில் கட்சிகளின் கூட்டணி நிலை வருமாறு:

| | |
|---|---|
| தொழிற் கட்சி | |
| + சோசலிச இடதுசாரிக் கட்சி | 80 |
| வலதுசாரிக் கட்சி | |
| + கிறிஸ்தவ மக்கள் கட்சி | |
| + மத்திய கட்சி | 62 |
| சீர்திருத்தக் கட்சி | 22 |
| சாமிஸ்க் தேசிய கட்சி | 1 |
| மொத்த அங்கத்தவர்கள் | 165 |

இந்நாட்டு அரசியல் சாசனத்தின்படி இடைத்தேர்தல் நடைபெற வாய்ப்பில்லாமையால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையற்ற நிலையிலும் கூட கூட்டணி அரசாங்கங்கள் வெற்றிகரமாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலைத் தொடர்ந்து புதிய அரசாங்கத்தை அமைப்பதில் வலதுசாரி அமைப்புகளான வலதுசாரிக் கட்சி, கிறிஸ்தவ மக்கள் கட்சி, மத்திய கட்சி ஆகியவற்றிற்கிடையில் பலத்த கருத்து முரண்பாடுகள் நிலவிய போதும் தேர்தலைத் தொடர்ந்து இரவு பகலெனப் பாராமல் நடாத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து செப்டம்பர் மாத இறுதி நாளன்று அதிகாலை மூன்று மணி பத்து நிமிடங்கள் அளவில் இந்த மூன்று கட்சிகளுக்கும் இடையில் கொள்கையளவில் ஒருமித்த கருத்து ஏற்பட்டது! இதைத் தொடர்ந்து 62 பிரதிநிதிகளை மாத்திரமே உள்ளடக்கியிருந்த இம்மூன்று கட்சிகளும் புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளன.

அமைச்சர்களின் எண்ணிக்கை அரசியல் யாப்பில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளபடி 18 அமைச்சர்களுடன், மேலதிகமாக பிரதம மந்திரியையும் சேர்த்து மொத்தம் 19 அங்கத்தவர்கள் கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டுள்ளது. வலது சாரிக் கட்சி தலைவர் ஜான் சீசே(JAN P. SYSE) பிரதமராகவும், கிறிஸ்தவ மக்கள் கட்சித் தலைவர் செல் பொண்டவிக்(Kjell Bondevik) வெளி நாட்டு அமைச்சராகவும், மத்திய கட்சித் தலைவர் ஜோஹான் ஜாக்கொப்சன்(Johan Jacobsen) மாநகர சபைகளிற்குப் பொறுப்பான உள்ளூராட்சி அமைச்சராகவும பதவியேற்றுள்ளனர். தொழிற் கட்சி அமைச்சரவை போன்று, அதிக அளவில் இல்லாவிடினும் புதிய அமைச்சரவையிலும் கணிசமானளவு பெண்கள் அங்கம் வகிக்கின்றனர்.

பிரதமர் பதவி தரப்படும் பட்சத்தில் இக்கூட்டணியில் ஒத்துழைக்க தயாரென ஆரம்பத்தில் கூறி வந்த சீர்திருத்தக் கட்சி பின் அமைச்சரவை அந்தஸ்து தரப்படும் பட்சத்தில் ஒத்துழைப்பு நல்க தயாராய் இருப்பதாகக் கூறியிருந்தது. எனினும் இக்கட்சியுடன் ஒத்துழைப்பதை மூன்று கட்சிகளும் ஏகமனதாக நிராகரித்து விட்டன. அமைச்சரவை விடயத்தில்

www.tamilarangam.net

சீர்திருத்தக் கட்சியுடன் எத்தகைய உடன்பாட்டிற்கும் வருவதை மூன்று கட்சிகளுமே நிராகரிக்கின்றன. எனினும் புதிய அரசாங்கம் தொடர்ந்தும் இயங்க வேண்டுமாயின் சீர்திருத்தக் கட்சியின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

'புதிய அரசாங்கம்' பற்றி பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த சீர்திருத்தக் கட்சி தலைவர் கார்ள்.இ.ஹாகன் தொழிற்கட்சி வீட்டிற்கு அனுப்பப்படல் வேண்டும் எனவும், தனது கட்சியின் கொள்கைகளிற்கு முரண்பாடான நிலை ஏற்படாத வரை புதிய அரசாங்கத்தைத் தான் எதிர்க்கப் போவதில்லை எனவும் கூறியுள்ளார். புதிய அரசாங்கத்தின் எதிர் காலம் சீர்திருத்தக் கட்சியின் கையிலேயே தங்கியுள்ளது.

தற்போதைய அரசாங்கமானது; பொருளாதார அரசியல் விடயங்களில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தா விட்டாலும்,

மத்திய கிழக்கு விடயத்தில் முன்பு கடைப்பிடிக்கப்பட்ட சற்று இறுக்கமான நிலை கைவிடப்பட்டு, மாறாக இஸ்ரேலிய விடயத்தில் மிதவாதத் தன்மை கடைப்பிடிக்கப் படலாமெனவும் கருதப்படுகின்றது. மூன்றும் உலக நாடுகளிற்கு உதவி வழங்கும் விடயத்தில் தொழிற் கட்சி கடைப்பிடித்த நெகிழ்ச்சித் தன்மையை தற்போதைய அரசு பெருமளவு கடைப்பிடிக்காது எனவும் கருதப்படுகின்றது. அதேபோல் தென் ஆபிரிக்க விடயத்திலும், தென் அமெரிக்க விடயத்திலும் பெருமளவு அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஆதரிக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

அண்மையில் 'நியூஸ் வீக்' சஞ்சிகை வெளியிட்டுள்ள கட்டுரையில் அரசியல் பொருளாதார சமூக விடயங்களில் உறுதியான கொள்கை உடையவராகவும், நாட்டின் பொருளாதாரத்தை சரியான முறையில் திட்டமிட்டு வழிநடத்தியவரும், அபிவிருத்தி அடையும் மூன்றும் உலக நாடுகளிற்கு பெருமளவு ஒத்துழைப்பு நல்கியவராகவும் விளங்கிய முன்னாள் பிரதமர் திருமதி.குருகாலம்



www.tamilarangam.net

புருண்ட்லாண்ட் ஆட்சியிலிருந்து அகற்றப் பட்டமை துரதிர்ஸ்டவசமானது என குறிப்பிட்டுள்ளது:

புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள போதிலும் நாட்டில் இன்று முக்கிய பிரச்சனையாக கருதப்படும் வேலையற்றோர் எண்ணிக்கையை குறைப்பதற்கு உருப்படியான திட்டங்கள் எதையும் முன் வைக்கவில்லை. மாறாக பல பொது நிறுவனங்களில் தொடர்ந்து ஆட்குறைப்பு முறையை கையாள்வதுடன், பல பாடசாலைகள், முதியோர் இல்லங்களை மூடவும், சமூக கொடுப்பனவுகளில் குறைப்பு செய்யவும் முடிவெடுத்துள்ளது: அத்துடன் 1990 ஆண்டு நோர்வே வரலாற்றில் பெருமளவு 'சேமிப்பு ஆண்டாக' இருக்குமென பத்திரிகைகள் கருத்து தெரிவித்துள்ளன. அதே வேளை நாட்டின் கைத்தொழில் துறையை ஊக்குவிக்கும் முகமாக ஒரு சில சலுகைகளும் வருமான வரியின் உச்சவரம்பெல்லை குறைக்கப்பட்டும் உள்ளது.

புதிய அரசின் கொள்கைகள் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்ற நிலையில் தற்போது கூட்டணி அரசுக்குள் கருத்து முரண்பாடு நிலவுவதாகவும் கூறப்படுகின்றது. புதிய அரசாங்கம் வெற்றிகரமாக (பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அற்ற நிலையிலும்) தனது ஆட்சிக்காலத்தைக் (நான்கு வருடத்தை) கொண்டு நடத்துமா அன்றேல்முன்னையதைப் போல் மீண்டும் தொழிற் கட்சி பதவிக்கு வருமா என்பதை பொறுத்திருந்து பார்க்க 'வேண்டும்.

ஹனுமான்.

கல்வி வசதிக்காக நோர்வே வர விரும்பும் மூன்றும் உலக நாடுகளின் மாணவர்களுக்கு விசா வழங்க வேண்டாம் என நீதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சினைக் கேட்டுக் கொண்டதையடுத்து 246 மாணவர்களுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது. இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தமிழர்களாவர். ஏனையோர் எதியோப்பியா, நைஜீரியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

நோர்வேயில் கல்வி கற்கும் எதிர்பார்ப்பில் தமது தொழில், கல்வியைக் கைவிட்டு நிற்கும் இம் மாணவர்களின் நிலை பரிதாபத்துக்குரியதாகும். இந்த உத்தரவு கல்வி நிறுவனங்களின் கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது.

இங்கு வந்து கல்வி கற்போர் திரும்பிச் செல்வதில்லை என்று கூறும் ஆய்வறிக்கை ஒன்றின் அடிப்படையில் செயல்படும் அரசு, 300 மாணவர்களை அனுமதிப்பது என்ற பழைய முடிவிலிருந்து விலகி 246பேருக்கு விசா வழங்க மறுத்தமை நிற ரீதியானதும், கண்டிக்கத்தக்கதும் என ஆசிரியர் குழாம் கூறியுள்ளது.

விசா மறுக்கப்பட்டவர்கள் இங்கு கல்வி நிறுவனங்களில் அனுமதியும், நிதி உதவிக்கான உத்தரவாதமும் பெற்றவர்களாவர்.

நாள்தோறும் வெளி நாட்டினருக்கு எதிரான சட்ட நெருக்கடிகள் அதிகரித்த வண்ணம் இருக்கும் நோர்வேயின் இந்த நடவடிக்கை பற்றி விவாதிக்கவுள்ளதாக கிறிஸ்தவ மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

எட்வின் றெசாரியோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




* வீதியில் போவதால் பஸ் என்றும் இல்லாமல், தண்டவாளத்தில் போவதால் ரயில் என்றும் இல்லாமல் திரிசங்கு நிலையில் இருக்கும் 'திரிக்' பயணம் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. நகரத்தின் நடுவே ஆடி ஆடிப் போகிற 'திரிக்' அனுபவம் ஒஸ்லோ வாசிகளுக்கு மட்டுமே பொதுவானது. 'திரிக்'கினுள் இருக்கும் போது கேட்கும் சத்தங்கள் கதைக்க மிக இடைஞ்சலானவை. ஒரு தடவை 'திரிக்' சத்தத்தையும் மீறி இரு தமிழர்கள் கதைத்தது, எனக்கு மிகப் பிடித்தது. 'தேசப்பற்று' பற்றித்தான் இருவருடைய விவாதமும். பாகிஸ்தான் இளைஞர்கள் இருவர் ஒஸ்லோவில்

தோன்றவில்லை? இவ்வாறான படைப்புகள் இனியும் தோன்றுமா என்பதும் சந்தேகமே. மகாபாரதத்தில் பாஞ்சாலியைத் துகிலுரிந்த போது கண்ணன் வந்தான். பாரதம் இலங்கையில் துகிலுரித்த போது கண்ணன் எங்கிருந்தான்? அவனுக்கு இப்போது நேரமில்லை என்கிறார்கள்.

* இயற்கை அழிவுகள் நடக்கிற போதெல்லாம் அதற்கு விஞ்ஞான நியாயங்களுக்கு அப்பாற்பட்ட காரணங்களைக் கூறுவது உலகெங்கும் உள்ள பழக்கம்தான். இலங்கையின் தென்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டபோது அதுபற்றிச் சிலர் 'உது கடவுள் செய்த வேலை' என்று கடவுளையும், பாதிக்கப்பட்டவர்களையும் குற்றவாளியாக்கியதை என் காதால் கேட்டேன். ஆனால், இவ்வாறு சொல்பவர்களுக்கு 1906ல் சான் பிரான்சிஸ்கோவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியின்போது நிகழ்ந்த ஒரு சம்பவம் நினைவுகூரத் தக்கது. பெரும்பாலான கட்டிடங்கள் - தேவாலயங்கள் உட்பட - தரைமட்டமாகிவிட்டன. பூமி நடுக்கம் ஓய்ந்த பின்னும் உறுதியாக நிமிர்ந்து

* அண்மைக் காலமாக நோர்வேயில் ஒரு அலை வீசுகிறது. அது கனடா அலை. இந்தக் கனடா அலை காரணமாக அனேக நண்பர்களைக் கண்டுபிடிப்பது மிகச் சிரமமாகப் போய்விடுகிறது. 'எம்பசி'க்குப் போகிற சனம் வேலைக்குப் போகிற சனத்தைவிட அதிகம். இவர்களுக்காக (வழி) திறந்தே இருக்கிறது அமெரிக்கத் தூதரகம். இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில்கூட இவ்வளவு தமிழர்கள் வரிசையாக நிற்பார்களா என்பது தெரியாது. பலர் இந்த முயற்சியில் வெற்றி அடைந்திருக்கிறார்கள். சிலர் மொத்தம் 50 டொலர் மட்டுமே செலவு செய்து கனடாபோய்ச் சேர்ந்து தமது 'பூர்வ ஜென்ம பலனை' அடைந்துவிடுகிறார்கள். சிலருக்குச் செலவு அதிகம், இன்னும் சிலருக்கு செலவுகள் மேலதிகம். இவர்கள் இந்தப் பணத்தைச் சேமிப்பிலிருந்தே எடுக்கிறார்கள். எந்தச் சேமிப்பிலிருந்து? வங்கியிலிருந்து தான். பயப்படாதீர்கள், களவு எடுக்கும் அளவு தமிழர்கள் (நோர்வேயில்) மோசமில்லை. இருக்கவே இருக்கிறது, வங்கிகளின் கடன் திட்டங்கள். மேலதிகமாக வீடியோ கமெரா, டெக் போன்றவற்றைக்

இருந்த நோர்வேஜியர்கள் குத்தியவருக்கு உற்சாகமூட்டியதை நேரில் கண்ட ஒரு நோர்வேஜியப் பெண் கூற அதை மூடி மறைத்ததில் இங்குள்ள பத்திரிகைகளுக்கும் முக்கிய பங்குண்டு. இது பத்திரிகைகளின் தேசப்பற்ரு? என்ற அவர்களின் விவாதம் சுவையாக இருந்தது. இப்படியான தேசப்பற்றைவிடப் பத்திரிகைகளின் பணி மிகப் பெரியது என்று கூறவேண்டும் போலிருந்தது. இருவருமே (ஒஸ்லோ பாணியில்) முறைத்தாலும் என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

* இந்தியாவில் மகாபாரதம் தொலைக் காட்சித் தொடராக மாதக்கணக்கில் ஒளிபரப்பானது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். மகாபாரதத்தை ஒளிபரப்பும் நேரத்தில் பிரசாரத்தை எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டுக் கைவிட்டதுண்டு. இதற்குக் காரணம் மகாபாரதத்தை விட்டுவிட்டு யாரும் கூட்டங்களுக்கு வரமாட்டார்கள் என்பதுதான். கார் திருட்டு அதிகம் நடப்பதும் மகாபாரதம் ஒளிபரப்பாகும் நேரங்களில்தான் என்று பத்திரிகை ஒன்று கூறுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பாரதத்தை மட்டுமல்ல, உலகத்தையே சுவையூட்டிக் கொண்டிருக்கிறது மகாபாரதம். இப்படி ஒரு காவியம் ஏன் தமிழில்

ஒன்று, ஒரு [illegible]

கேட்கச் 'சுவை'யாக இல்லை?

* முன்னர் ஒருமுறை நோர்வே நாட்டவர்கள் தங்கள் அயல் நாடுகளான சுவீடனையும், டென்மார்க்கையும் கிண்டல் செய்வது பற்றி எழுதியிருந்தேன். இந்தப் பழக்கம் இந்நாட்டவர்க்கு மட்டும் உரியதல்ல, அயல் நாடுகளான சுவீடனும் டென்மார்க்கும் இதே பழக்கம் கொண்டவை. அண்மையில் வைத்தியசாலை ஒன்றில் (வழமை போல) நீண்ட நேரம் காத்திருந்தபோது, காத்திருப்போர் பொறுமை இழக்காதிருக்க வைக்கப்படும் சஞ்சிகைகளில் ஒன்றை வாசித்தேன். மறுபடியும் சில துணுக்குகள் சுவீடனைப் பற்றி. 'E6 பாதையைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் சுவீடன்காரர்கள் என்ன செய்வார்கள்?', 'E3 பாதையில் இரண்டு தரம் ஓடுவார்கள்'. மற்றைய துணுக்கு, இரு சுவீடன்காரர்கள் அன்றைய திகதியை மறந்துவிட்டார்கள். திகதியைக் கண்டுபிடிக்க ஒருவர் வழி கண்டுபிடித்தார். மேசையில் இருந்த பத்திரிகையைக் காட்டி 'இதில் பார்த்தால் கண்டுபிடித்து விடலாம்' என்ருர். அதைக் கேட்ட மற்றவர் 'முடியாது, ஏனென்ருல் அது நேற்றைய பத்திரிகை' என்ருர்.



'விலாசமாக' இறங்க விருப்பமாக இருக்கிறதா? இருக்கவே இருக்கிறது, தவணை முறை விற்பனைத் திட்டம். இங்கு எஞ்சியுள்ள தமிழர்கள் கள்ளர்கள் என்று பெயரெடுத்தால் என்ன, இங்குள்ளவர்களுக்கு வங்கிகள் கடன் கொடுப்பதையும், கடைகள் பொருட்கள் விற்பனை செய்வதையும் நிறுத்திஞலென்ன, கனடா போகிறவர்கள் சந்தோசமாகப் போனல் சரி. அங்கே அவர்களுக்கு வேலை காத்திருக்கிறது. விரைவாகப் போய்ச் சேரட்டும்.




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் வந்துவிட்டது. எனது வாழ்வின் கதையை எழுதத் தொடங்குகிறேன். எங்கை தொடங்கிறதெண்டு தெரியேல்லை. நடுவிலிருந்து தொடங்கினுல் 'புனைகதைத்' தனமாக இருக்கக்கூடும். ஆனுல் 'தொடங்கிறது', 'ஆரம்பிப்பது' என்பதெல்லாம் நேரத்தைக் குறிக்கும். இங்கே இறந்த காலமோ, நிகழ்காலமோ, எதிர்காலமோ இல்லையே! என்னவோ என்னுல் ஒரு முடிவுக்கு வரமுடியுது, நான் எழுதத் தொடங்கிறன்.

* * * * *

நினைக்கிறேன் - ஒருவேளை கோயில் திருவிழாவுக்கு ஆயுத்தப்படுத்தச் சொல்லி அப்பா சொல்லிவிட்டிருக்கலாம். ஆனுல் ஒண்டு மட்டும் நிச்சயம், நான் எனது சுயவிருப்பின் பேரில் அங்கில்லை. அப்பர் என்னை நிர்ப்பந்தப் படுத்தியிருக்கிருர். நான் என்ன செய்ய வேணும் எண்டு எனக்குத் தெரியாது. உண்மையிலை அப்பாவின்ரை சட்டத்தை மீற எனக்குப் பயம். அதே நேரம் கடவுளைப் பற்றி எனக்குள்ளும் பயங்கள் இருந்தது. ஆச்சி சொல்ற புராணக் கதைகளைக்




ஒருநாள்- பறவைகளும் சத்தமிடுகிற, நாய்களின் குரைப்பு எதிரொலித்துக் கொண்டிருக்கிற அதிகாலை நேரம்..... கோயிலுக்குப் பக்கத்தில் குந்தியிருக்கிறன். ஊர்ச்சனங்களால் 'மெயின் ரோட்' என்று அழைக்கப்படுகிற வீதியருகே கோயில் இருக்கிறது. அந்த வீதி உண்மையில் 'மெயின் ரோட்' அல்ல. சாதாரண ஒழுங்கை, சனங்கள் சந்தைக்குப் போகப் பாவிக்கிற ஒழுங்கை.

ஏன் அங்கே இருக்கிறேன் என்று சரியாகத் தெரியவில்லை. நான்

## 3ம் அத்தியாயம்

கேக்கத்தான் எனக்குச் சரியான விருப்பம். பன்ரெண்டு கையும் ஆறு முகமும் உள்ள ராசா... மீன் வால் உள்ள ஒரு பெண் .....கண்ணைக் குத்திக் கடவுளுக்கு குடுத்த பெடியன்... இப்பிடிப்பல.

எனக்கு ஒரு எண்ணம் இருந்தது, நான் கடவுளைக் கும்பிடாவிட்டால், வாயின் இரு பக்கமும் பெரிய பல்லோடை கடவுள் வந்து நடு இரவிலை என்ரை ரத்தத்தைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிப்பார் அல்லது கழுத்தை நசிச்சு அல்லது என்னை இழுத்துப் பாம்புகள் இருக்கிற ஆழமான கிணறெண்டிலை தள்ளிவிடுவர் எண்டு.

எல்லாமே அதிசயமாய் இருந்தது எனக்கு. நேற்றுத்தான் 8ஆம் திருவிழா முடிந்தது. அந்த நித்திரை வெறி இன்னும் முடியேலை. அதுக்கிடையிலை நாளைக்குத் தேர்த் திருவிழாவாம், என்னைக் கோயிலடியில என்ன நடக்குதெண்டு பாத்திட்டு வரட்டாம். என்ரை அப்பற்றை சேட்டையள்!

சும்மா தலைக்கு முண்டு குடுத்துப் புறங்கையில் புழுதியை ஏந்திய நான் திடீரென விழித்தேன். வாழைக் குலையை... அதுவும் முழுவாழையுடன் தோளில் சுமந்தபடி சோமன்!

சோமன் என்றால் குடிகாரன் என்பது எல்லாருக்குந் தெரியும். குடிகாரன் எப்படி முழுவாழையை, குலையுடன் சுமப்பது என்பது ஒருத்தருக்குந் தெரியாது. 'குடிகாரனோடை சேராதை, அவங்கள் என்ன செய்யிறாங்களெண்டு அவங்களுக்கே தெரியாது' எண்டு ஒருநாள் அப்பர், இல்லை ஆரோ சொல்லி எனக்குத் தெரியும். என்றாலும் நான் வியந்தேன். ஏதோ ஒரு உந்துசக்தி அவனைக்



www.tamilarangam.net

காவுகிறது. அவன் காவவில்லை. என்னைப் போலத்தான் அவனும்...! ஏதோ ஒன்றுக்கு ஆட்பட்டு அவன் ஆடுகிறுன்.

அந்த நேரத்தில்- அந்த வயதில் இதை நான் உணர்ந்திருக்க முடியாது. ஆனுலும் நான் வியந்ததை மறக்கவும் முடியாது.

எழுந்தேன். என் காற்சட்டையில் நேற்றைய புழுதி ஒட்டிக் கொண்டிருந்தது. ஒரு தட்டுத் தட்டிவிட்டு கோவில் உள்மண்டபத்துள் நடந்தேன்.

எதிரே நடந்துவந்த இளம்பூசாரி ஐயாத்துரை ஒரு சிறிய வாழைப்பழத்தைக் காட்டி 'வாறியா' எண்டார். எனக்குப் பயம், பயத்துக்கு மேல் பயம். அவர் என்ன கேக்கிருர் எண்டு எனக்கு நல்லாத் தெரிஞ்சதால வந்த பயம்.

முழுசியபடி அப்பால் நடந்தேன். என்னேட பள்ளிக்கூடத்தில படிக்கிற- ஆனுல் கனதரம் 'பெயில்' விட்ட வைரவமூர்த்தி இளநீர் குத்துற அலவாங்கடியில தன்னை விட்டால் வேறை ஆக்கள் இல்லை எண்ட தடிப்போட குபுக், குபுக், குபுப்பெண்டு இளநீரைக் குத்திக் கொண்டிருந்தான்.

அவனுக்கு நல்ல உடம்பு எண்டு முந்தி எப்பவோ- சொண்டை நீட்டிப் பிடிச்சுக்கொண்டு வாற வள்ளிநாயகி ரீச்சர் சொன்னது ஞாபகம் வந்தது. வள்ளிநாயகி ரீச்சருக்குப் பெரிய முலையெண்டு- வைரவமூர்த்தி தன்ரை சிநேகிதரோட ஒருநாள் கதைக்கேக்கை நான் கேட்டதும் ஞாபகம் வந்தது.

கண்ணைச் சுழற்றிக்கொண்டு ஒரு கொட்டாவி வந்தது. இலந்தைப் பழம் ஒழுங்கையடியில விழுந்துகிடக்கும். புழு இல்லாட்டி நல்ல உரிசையாய் இருக்கும். உச்சிக் கொப்பைக் குறிபார்த்து எறியவேணும். அப்பதான் பொல பொலவெண்டு கொட்டுண்ணும். அப்பர் கிடந்தார், கோயிலும் மண்ணுங்கட்டியும். அம்மாளே... முருகா... பிள்ளையாரே என்னைக் காப்பாத்து.

தேருக்கு கட்டாயம் வருவன். ஓடிவந்துவிட்டேன் நான்.

(தொடரும்)



AN ARTIST'S drawing of five of six men as they appeared in court yesterday charged with trafficking.

போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டு சில தமிழர்கள் கனடாவில் கைதானதும், அவர்களை ஹெலி கொப்டர் மூலம் சிறையிலிருந்து எடுக்க வேறு சில தமிழர்களும், கனேடியர்களும் முயன்று தோல்வி அடைந்ததும் சிலர் அறிந்திருக்கலாம். இவர்கள் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட போது அதனைப் பார்த்த ஓவியர் ஒருவர் இவர்களை ஓவியமாக கீறி 'Toronto Sun' என்ற பத்திரிகையில் பிரசுரித்துள்ளார்.

கனடாவிலிருந்து ஜெ. குமார்.

www.tamilarangam.net

# நோர்வேயில் தஞ்சம் கோரும் (தனியே வந்த) அகதிச் சிறூர்களுக்கு வரவேற்புமனை



தனித்துவந்து தஞ்சம் கோரும் 8வயதுக்குட்பட்ட சிறூர்களுக்கான புதிய ரவேற்பு மனை ஒஸ்லோவுக்கு புப்பாலுள்ள Nesodanஎனும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'Sandvold ரவேற்புமனை' என அழைக்கப்படும் இவ் ரவேற்புமனை (Mottak sted), டைப்படவிருக்கும் Skullerud akken வரவேற்புமனையின் பணிகளைப் பொறுப்பேற்கும்.

13- 18 வரையிலான இருபது சிறுவர்கள் andvold வரவேற்பு மனைக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். இவ் வரவேற்பு னையானது 40பேருக்கு வதிவிட வசதி ழங்கவல்லது. அவசியமாகும் பட்சத்தில் மலும் ஒரு வரவேற்புமனை (வயது றைந்த) தஞ்சம் கோருவோருக்காக ஆரம்பிக்கப்பட உள்ளது.

தஞ்சம் கோரி வரும் சிறுவர்களின் விண்ணப்பங்களுக்கு உரிய அதிகாரிகளினுல் முன்னுரிமை ழங்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

நோர்வேயில் வசிப்பதற்கு அனுமதி பெற்றவர்களை, விரைவாக மாநகர சபைகளுக்கு (Kommune) அனுப்பி அங்கு அவர்கள் வதிவதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யும் பொருட்டு தஞ்சம் கோரும் சிறுவர்களின் விண்ணப்பங்களின் மீதான தீர்மானம் மூன்று மாதத்துள் எடுக்கப்படுகின்றது.

ஆனுல் தஞ்சம் கோருவோரை ஏற்றுக்கொள்ளும் மாநகர சபைகளைக் கண்டுபிடிப்பது தான் பிரச்சனையாக உள்ளதாம். எனவே தஞ்சம் கோரும் இளஞ்சிறூர்களை ஏற்றுக்கொள்ளும் மாநகர சபைகளுக்கு இதனுல் உண்டாகும் செலவீனங்கள் தொடர்பாக அரசு உரிய நடவடிக்கைகளைச் செய்துள்ளது.

## பெற்ருேரில்லாத சிறுவர்கள்

மொத்தமாக 124 பெற்ருேர் இல்லாத இளஞ்சிறூர்கள் அரச வரவேற்புமனைகளில் வசித்து வருகின்றனர். இவர்களில்

www.tamilarangam.net

பெரும்பான்மையானோர்- சிறுவர்களுக்கென விசேட ஏற்பாடுகள் இல்லாத- வழமையான வரவேற்பு மனைகளிலேயே வசித்து வருகின்றனர். இவர்களுள் 62சிறுவர்கள் மட்டுமே நோர்வேயில் வதியும் அனுமதி பெற்றவர்கள். இவர்கள் தங்களை ஏற்கும் மாநகரசபைகளை எதிர்பார்த்திருக்கும் அதேவேளை, ஏனையோர் தங்கள் விண்ணப்பந் தொடர்பான அரசின் தீர்மானத்தை எதிர்பார்த்துக் காத்துள்ளனர்.

முக்கியமாக பாதுகாவலர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள் என்று எவருமே அற்ற சிறுவர்கள் இவ் விசேட வரவேற்பு மனையில் மாநகர சபைகள் ஏற்றுக் கொள்ளும்வரை வசிப்பர்.

தஞ்சம் கோரியுள்ள 124சிறுர்களில் 89சிறுர்கள் நோர்வேக்கு தனித்து வந்துள்ளனர். இவர்களுள் பெரும்பாலானோர் 16- 18வயதுக்குட்பட்டவர்கள். ஏனையோர் தங்கள் சகோதரர்கள், உறவினர்களுடன் வந்தோராவர்.


ரமணன்

சிறந்த பராமரிப்பு

Sandvold மருத்துவமனையில் தஞ்சங்கோரும் சிறுர்களை நன்கு பராமரிக்க என்று ஒரு அதிகாரி உள்ளார். சிறுவர்களின் சொந்த நாடுகளில் இருந்துவந்த பலர் சூழல் உதவியாளர்களாக இங்கு பணிபுரிகின்றனர். தஞ்சம் கோரும் சிறுவர்களில் அனேகமானோர் ஆண்கள். ஒரு அறையில் ஒருவர் அல்லது இருவர் என்ற ரீதியில் இங்கே இவர்கள் வசிக்கின்றனர். நாளாந்த சுத்திகரிப்பு கடமைகளை அவர்களே செய்யவேண்டும்.

முன்னர் முதியோர் பராமரிப்பு இல்லமாக விளங்கிய இது தற்போது திருத்தி அமைக்கப்பட்டு தஞ்சம் கோரும் இளம் சிறுர்களுக்கான பராமரிப்பு நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. அரசினதும் வெளிவிவகார அமைச்சினதும் நிதியுதவியுடன் செஞ்சிலுவைச் சங்கம் இவ்வரவேற்புமனையை நிர்வகிக்கின்றது.

ஆசிரியர்: கொலம்பஸ் எப்படிப் புகழ் பெற்றார்?

மாணவன்: முதன்முதல் அமெரிக்காவுக்கு விசா இல்லாது போனதால் !

சஞ்சிகை ஒன்றிலிருந்து
சங்கீதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப் பொருட்களை மலிவான விலையில் நீங்கள் பெறவேண்டுமானல் எங்களிடம் வாருங்கள்.

# CEYLON MAT A.S

21, DRONNINGSGATA, 0152.OSLO.1. T.P:332619

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் நோர்வேயின் எப்பகுதிக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அன்றைய TOYEN KRO
இன்றைய DARBAR

அன்றும் அதே சுவை
இன்றும் அதே சுவை

INDISK & MAT VEGETAR

DARBAR

MAT
OG VINHUS
INDISK MAT PÅ DET BESTE
SPENNENDE VEGETAR-RETTER
TANDOORI RETTER
PIZZA

Rimelige priser
TILBUD!

Mon-Fre....Til 20.00
HAPPY HOUR RIMELIGE DRIKKER.-
Indisk middag Kr. KR.59.
Lor-Son....Til 20.00
Indisk buffet KUN Kr. 89.-

Åpent alle dager kl. 14.00 - 23.00
Smedgt. 49, (Ing. Jens Bjelkesgt.) Oslo 6
(3 Min. gange fra Tøyen T-banest.)
Tlf. 67 47 04
GOD PARKERING ● TAKE AWAY




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்